# பல்லவம்

"உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது"




இதழ் – 05

வெளியீடு
பல்லவராயன்கட்டு பொது நூலகம்
பூநகரி, கிளிநொச்சி
2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவம்

## இதழ் 05


"உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது"

வெளியீடு
பல்லவராயன்கட்டு பொது நூலகம்,
பூநகரி, கிளிநொச்சி.
2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலர் | : | பல்லவம் |
| உரிமை | : | பல்லவராயன்கட்டு பொது நூலகம் |
| பதிப்பு | : | ஒக்டோபர் 2023 |
| பிரதிகள் | : | XII + 56 |
| வெளியீடு | : | நூலகர்<br>பல்லவராயன்கட்டு பொது நூலகம் |
| அச்சுப் பதிப்பு | : | ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"பல்லவம்" சஞ்சிகை வெளியீடு காலத்தின் தேவை கருதிய கனதியான பணி.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பல்லவராயன்கட்டு பொது நூலகம் தனது பணிகளின் கனதியைப் படைப்புக்களாக்கி, அவற்றுக்கு நூலுருக் கொடுத்து ஐந்தாவது தடவையாக வெளியீடு செய்யும் "பல்லவம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வும் நிறைவும் அடைகிறேன்.

பூநகரிப் பிரதேசத்தின் எல்லைக் கிராமங்களான ஜெயபுரம் பல்லவராயன்கட்டு, உள்ளிட்ட பிரதேசங்களின் கல்விப் பண்பாட்டில் கனதியான பணியாற்றிவரும் பல்லவராயன்கட்டு பொது நூலகம் தன் பணிகளை நுகர்வதன் மூலம் உருவாக்கம் பெறும் கல்விச் சமூகத்தின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும் மனதிற்கொண்டு செயற்பட்டு வருவதன் ஓர் அங்கமாக, தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்களைத் தொகுத்து "பல்லவம்" என்னும் சஞ்சிகையை வடிவமைத்து ஐந்தாவது தடவையாக வெளியீட்டு வைப்பது வரவேற்கத்தக்கது.

போரின் விளைவால் சிதைந்துபோன பொருளாதாரம், அபிவிருத்தி என்பவற்றை மீளக்கட்டமைக்க முடியாத நிலையிலுள்ள நகரின் எல்லைப்புறக் கிராமங்களில், தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கான வசதி வாய்ப்புக்களும், களங்களும் கிடைக்காத சூழலில் தம்மைத் தகவமைத்துக் கொள்ளமுடியாதிருக்கும் படைப்பாளர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்ப களமாகவும், அடுத்தகட்ட நகர்வுக்கான உந்துதலாகவும் இச்சஞ்சிகை வெளியீட்டை என்னால் உணரமுடிகின்றது.

காலத்தின் சுவடாய் கனதியான ஆக்கங்களைத் தாங்கி, தனது ஐந்தாவது குழந்தையைப் பிரசவிக்கும் "பல்லவம்" சஞ்சிகையின் வெளியீடு சிறக்கவும், காலமும், தேவையும் உணர்ந்து செயலாற்றியுள்ள பல்லவராயன்கட்டு பொது நூலகத்தின் நூலகர்கள், பணியாளர்கள், பூநகரிப் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் உன்னதமான பணிக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**

பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எமது முன்னோர்கள் ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஓதுவதென்பது கற்றல் அல்லது வாசித்தல் எனப் பொருள்படும். ஒவ்வொரு மனிதனும் மனிதனாக வாழ வாசிப்பு என்னும் சாதனம் துணைபுரியும் என்பது திண்ணம்.

மனிதன் அறியாமை, ஆசை, பொறாமை, பொய் போன்ற தீய எண்ணங்கள் மற்றும் மடமைத்தனம், மூடநம்பிக்கைகள் தவறான வழக்கங்கள் வழி நிற்பதனால் பல தவறான செயல்களில் ஈடுபடுவதுடன் பிறரை துன்புறுத்தவும் வேதனைப்படுத்தவும் செய்கிறான். அதர்ம வழியில் செல்கின்றான் இவற்றை தடுத்து அவனை நல்வழியில் இட்டு செல்வன நல்ல புத்தகங்கள் என்பதனை அவனை உணரச் செய்வது சமூக அக்கறையாளர்களின் பெரும்பணியாகும்.

வாசிப்பு மனிதனைப் பூரணமடைய செய்கிறது என்கிறார்கள். நல்ல புத்தகங்களை வாசித்து அதன்படி ஒழுகுபவர்கள் சிறந்த மனிதர்களாக இங்கே வாழ்கின்றனர். இதனையே வள்ளுவனார் "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு" என்றார்.

இத்தகு பெருமையும் பேறும் உடைய வாசிப்பு என்னும் தூண்டலை ஏற்படுத்தும் போது நூலகமானது ஆண்டுதோறும் வெளியிட்டுவரும் பல்லவம் சஞ்சிகையானது வளர்ந்து சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகத் திகழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ப. சத்தியராகவன்**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு கற்றனைத்தூறும் அறிவு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய நாம் எந்தளவிற்கு அறிவாய்ந்த நூல்களை ஆழமாகக் கற்கின்றோமோ அந்தளவிற்கு எம்மால் முழுமையான அறிவை பெற்றுக் கொள்ளமுடியும். என திருவள்ளுவர் வாசிப்பின் முக்கியத்துவத்தை சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார். வாசிப்பானது ஒரு மனிதனுக்கு வெறுமனே நூலறிவை மட்டும் வழங்காது மாறா சிந்திக்கும் ஆற்றல் மற்றும் நிதானத்தை வழங்குகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக பூநகரிப் பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் வெளியிடப்படும் பல்லவம் சஞ்சிகையானது வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகையானது இளம் சமுதாயத்தின் ஆற்றல்களையும் திறன்களையும் வளர்ப்பது மட்டுமல்லாது ஒரு நல்ல சமுதாயத்தையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திலே வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகை இளம் சமுதாயத்தின் நடுவே கதிர்போல் ஊடுருவி அவர்கள் மனங்களில் பூப்போல் மலர்ந்திக்க வாழ்த்துகின்றேன்.

**இரத்தினம் தயாபரன்**
செயலாளர்,
பூநகரி பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் வெளியிடப்படும் "பல்லவம் 05" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

பூநகரிப் பிரதேசமானது கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். ஆதிக் குடியிருப்புக்களைக் கொண்ட இப்பிரதேசம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலச் சிறப்புக் கொண்ட இப்பிரதேசத்தின் புவியியல் சிறப்பு பரந்த கடல் வளத்தினையும், அகன்ற காடுகளையும் பனை, தென்னை, நெல்வளங்கள் செழிப்பதற்காக தரைத்தோற்றப் பின்னனியினையும் கொண்டு விளங்குகின்றது.

இவ்வாறு சிறப்புப் பெறும் பூநகரி பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் வெளியிடப்படும் பல்லவம் சஞ்சிகையானது பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி பெரியவர்கள் முதல் சிறியவர்களும் படித்து பயன்பெறும் வகையில் பல்வகை அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்றமை யாவரும் அறிந்ததொரு விடயமாகும்.

எனவே எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வெளிவர இருக்கும் "பல்லவம் 05" சஞ்சிகையானது சிறப்புற வெளிவர எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இம்முயற்சியானது மென்மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனது பாதார விந்தங்களைப் பணிந்து இவ்வரிய முயற்சியில் ஈடுபடும் மலர்க்குழுவினருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**த.அகிலன்**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மையான வரலாறுகளைக் கொண்டமைந்த பூநகரிப் பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றமான பூநகரிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் "உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது" எனும் தொனிப்பொருளில் 2023ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் "பல்லவம்" இதழ் 05 சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்லவராயன்கட்டு உப அலுவலக பிரதேச வாழ் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை பூநகரி பிரதேச சபையானது பல்லவராயன்கட்டு உப அலுவலகத்தினூடாக வழங்கி வருவதுடன் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக பொது நூலகத்தையும் நடாத்தி வருவது போற்றுதற்குரியது. இந்நூலகத்தின் வளர்ச்சியில் நூலகரின் அயராத முயற்சியால் வெளிவரும் "பல்லவம்" என்ற இச்சஞ்சிகை பல்லவராயன்கட்டு வாழ் மக்களின் வரலாறுகள், பாரம்பரியங்களை வெளிக்கொணரும் அதேவேளை இப்பகுதி மாணவர்களின் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் வெளிக்கொணரும் ஓர் கருவியாகவும் இருப்பது இப்பகுதி மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதம் ஆகும்.

**அ.சசிகுமார்,**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், (பூநகரி பிரதேச சபை)
பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலகரின் உள்ளத்திலிருந்து....

பண்பாடுகளின் உறைவிடமான வன்னி மண்ணின் வளங்கொழிக்கும் பூநகரிப் பிரதேசத்தில் ஆன்றோர்களையும் சான்றோர்களையும் உருவாக்கி அறிவுப் பொக்கிசங்களை தன்னகத்தே கொண்டு சிறப்புடன் செயற்படும் பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகமானது தன்னை சூழஉள்ள சமூகத்தின் அறிவுப் பசியைப்போக்கி விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது.

அந்த வகையில் இவ்வருடமும் பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு உபஅலுவலகத் திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடம் இருந்தும் ஏனைய வாசகர்களிடையேயும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும், போட்டிகளையும், செயலமர்வுகளையும் நடாத்தி வாசகர்களை நூலகர் சார் திருப்ப அயராது பாடுபடுகின்றது. மேலும் எம்முடைய வாசகர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்லவம் இதழ் இவ்வருடமும் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பல்வேறு ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகைக்கு பலவழிகளில் ஊக்கப்படுத்திய பிரதேச சபையின் செயலாளர் மற்றும் பல்லவராயன்கட்டு உபஅலுவலக உத்தியோகத்தர்களுக்கும் வாழ்த்துச் செய்தி வழங்கியவர்களுக்கும் ஆக்கப்படைப்பாளர்களுக்கும் என் நூலக வாசகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்பல்லவம் இதழ் பல சுவைகள் கொண்டு புதுமணமும் தந்து சிறப்புடன் தொடர்ந்தும் வெளிவர அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**திருமதி லோகேஸ்வரன் பர்மிளா**
நூலகர்,
பல்லவராயன்கட்டு பொது நூலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாட்டுக்குழு - 2023

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. இரத்தினம் தயாபரன்<br>செயலாளர், பூநகரி பிரதேச சபை |
| உப தலைவர் | :- | திருமதி லக்சன் டயானி<br>பொறுப்பதிகாரி,<br>உபஅலுவலகம், பல்லவராயன்கட்டு |
| செயலாளர் | :- | திருமதி லோகேஸ்வரன் பர்மிளா<br>நூலகர், பொது நூலகம், பல்லவராயன்கட்டு |
| ஆலோசகர் | :- | திரு. அ.சசிக்குமார்<br>சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| உறுப்பினர்கள் | :- | 1) திருமதி ஜெயஸ்ரீதர் கோமளா<br>கிளி ஜெயபுரம் மகாவித்தியாலயம்<br>2) திருமதி சந்திரபோஸ் கந்திமதி<br>கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம்<br>3) திருமதி கௌரீசன் குமுதினி<br>ஆரம்ப சுகாதார நிலையம் ஜெயபுரம்<br>4) செல்வி பரமசிவம் டயானா<br>நூலக அங்கத்தவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகைக் குழு - 2023

ஆசிரியர் :- திருமதி லோகேஸ்வரன் பர்மிளா
நூலகர்

துணை ஆசிரியர்:- செல்வி தர்மராசா கௌசல்யா

உறுப்பினர்கள் :- 1) திரு. இராமையர் இராஜரட்ணம்

2) திருமதி பார்த்தீபன் றாகினி
கிளி/ ஜெயபுரம் மகா வித்தியாலயம்

2) திரு.கோவிந்தபிள்ளை அரியநாயகம்
முன்னாள் கிராம அலுவர்

4) திருமதி ஐங்கரன் இந்துஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவத்தின் உள்ளே.....


வாழ்த்துச் செய்திகள்

நூலகரின் உள்ளத்தில் இருந்து

செயற்பாட்டுக் குழு

சஞ்சிகைக்குழு

1. குழந்தைக்கான உணவு முறைகள் 01

2. உலகம் வாசிப்பவருக்கே சொந்தம் 04

3. மாவீரன் பல்லவராயன் வரலாற்றுப் பார்வை 05

4. அறிவுசார் சமூகத்தின் நூலகத்தின் பங்கு 09

5. தாயில் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை 13

6. My School 17

7. சந்திரயான்-3 18

8. நிமிர்ந்து நில் 19

9. ஜெயபுர கிராமம் அமைந்த வரலாறு 20

10. சோலை பல்லவராயன் கட்டில் எழுந்தருளியிருக்கும் நாகபூசணி அம்பிகையின் வரலாறு 22

11. தீர்வுக்களும் தீர்மானங்களும் 23

12. சரித்திரப் பதிவிற்கு முற்பட்ட காலத்தில் பரதம் பற்றி எடுத்தியம்புதல் 24

13. வாசிப்பை நேசிக்க வாரீர் 25

14. MY FAVOURITE SUBJECT 25

15. நாயன்மார் காட்டிய பக்திநெறி 27

16. கல்வியின் அவசியம் 30

17. பாடசாலைகளின் பௌதிக வள முகாமைத்துவம் 31





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. என் ஏக்கம் 33
19. எனது ஆசை 35
20. Why one should learn English 36
21. கருத்தில் கொள்ளப்பட வேண்டிய இளையோர் வன்முறை 38
22. வாசிப்பவருக்கே உலகம் சொந்தமானது 41
23. எங்கள் ஊரும் நூலகமும் 43
24. வாசிப்பால் வாழ்வில் உயர்வோம் 44
25. போதைப் பொருள் பாவனையும் மாணவர் சமுதாயமும் 46
26. சிறுநீரகத்தின் முக்கியத்துவமும் உடல் ஆரோக்கியமும் 49
27. பல்லவம் இதழ் இன்று பல இதழ்கள் விரிகிறது 53
28. மாணவர்கள் வாசிப்பதன் நேசித்தலின் மகத்துவம் 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கான உணவு முறைகள்

**Dr.T.துஷ்யந்தன்**
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர்.



ஆரம்பக் குழந்தைப் பருவத்தில் வழங்கப் படும் முறையான போஷாக்கானது, வெற்றி கரமான எதிர்காலத்திற்கான பாரிய முதலீடாகும்.

பாதுகாப்பான, போஷாக்கு நிறைந்த உணவுகளை வயதிற்கேற்ப சரியான அளவு களிலும் நேர இடைவெளிகளிலும் வழங்குவதன் மூலம் நீங்கள் உங்கள் குழந்தையைப் புத்திக் கூர்மையும் ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் உடைய குழந்தையாக்கலாம்.

**குறை நிரப்பு உணவுகளை வழங்குதல்**

**குறைநிரப்பு உணவுகள் என்றால் என்ன?**

- இவை தாய்ப்பாலைவிட மேலதிகமாக வழங்கப்படும் உணவுகள் ஆகும். விரைவாக வளர்ச்சியடையும் சுறுசுறுப்பான குழந்தைக்கு 6 மாதங்களை அடைந்த பின் தாய்ப்பால் மாத்திரம் போதுமற்றதாகையால் தாய்ப்பாலைக் குறைநிரப்புவதற்காக வழங்கப்படும் உணவுகள் ஆகும்.
- ஆறு மாத வயதிற்குப் பின் மிகச் சிறந்த வளர்ச்சிக்கும், மூளை விருத்திக்கும். ஆரோக்கியத்திற்கும் வேண்டிய மேலதிக ஊட்டச்சத்துக்களையும் சக்தியையும் குறைநிரப்பு உணவுகள் வழங்குகின்றன.
- சரியான நேரத்தில் போதுமான அளவுகளில் குறைநிரப்பு உணவுகள் தேவைப்படும் போதிலும், இரண்டு வருடங்களுக்கும் அதற்குப் பிற்பாடும் கூட உணவுடன் சேர்த்துத் தாய்ப்பாலும் வழங்கப்படுகின்றது.

**தயவு செய்து இலகுவாகவும் மகிழ்வோடும் உங்களுடைய குழந்தைக்கு உணவூட்ட ஆரம்பிக்கும் முதல் நாளிலிருந்து கீழ்வரும் அறிவுறுத்தல்களை கவனமாக பின்பற்றவும்.**

குறைநிரப்புணவை ஆரம்பிக்கும் நாளிலிருந்தே வயதிற்கேற்ப பொருத்தமான உணவுப் பழக்கங்களை குழந்தைக்கு பயிற்றுவிக்காவிட்டால் குழந்தை தவறான உணவுப் பழக்கங்களை மிக விரைவாக விருத்தி செய்து கொள்வதற்கு வழிவகுக்கும். இதன் விளைவாக வயதிற்குரிய உணவூட்டலில் சிக்கல்நிலை மற்றும் கடினத்தன்மை அதிகரிக்கும் என்பதுடன் வளர்ச்சியும் பாதிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே குழந்தைக்கு சரியான உணவுப்பழக்கங்களை குறைநிரப்புணவு ஆரம்பிக்கும் முதல் நாளிலிருந்து பழக்கப்படுத்திக்கொள்ளவும். குழந்தை ஒரு வயதினை அடையும் நிலையில் பெரியோர்களினை ஏறக்குறைய ஒத்த போஷணையுள்ள உணவினை உட்கொள்ள பழக்கப்படுத்திக் கொள்வது கட்டாயமாகும்.

உணவானது கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் வயதுடன் மாற்றியமைத்தல் தேவையாகும். இது குழந்தை நன்றாக உண்பதனை மட்டுமன்றி அதனுடைய மூளை வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

- குழந்தையுடன் கதைத்துக் கொண்டு மெதுவாக அவனை உணவு உண்பதற்கு விடுங்கள். குழந்தையின் வயதிற்கு பொருத்தமான
  - சிறிய கதைகளை சொல்லுதல்
  - வெவ்வேறான சுவைகளை அறிமுகப்படுத்தல்
  - வெவ்வேறான நிறங்களை பெயரிடுதல்
  - வெவ்வேறான உணவு வடிவங்களை காட்டுதல்
  - உணவுக் வளங்களின் எண்ணிக்கையை கணக்கிடுதல் போன்றன.



- குழந்தை இன்னும் உணவு உண்ணக் கற்றுக் கொள்கிறது என்பதனை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பொறுமையாக இருங்கள்.
- குழந்தையை எவ்வாறு உணவு உண்பது என்பதனை கற்றுக் கொள்ள விடுங்கள்.
  - உணவு உண்ணும் போது உணவைக் கையாள குழந்தையை அனுமதியுங்கள்.
  - சிறிய உணவுத் துணிக்கைகளை பற்றி எடுத்து அவன்/அவளுடைய வாயில் இடுவதற்கு அனுமதியுங்கள்.
  - குழந்தையை கிண்ணம் மற்றும் கரண்டியினை கையாள விடுங்கள்.
- குழந்தையை ஒழுங்கான உணவு நேரத்தினை படிப்படியாக பழக்கப்படுத்திக் கொள்ள விடுங்கள்.

சாத்தியமான நேரமெல்லாம் குடும்பமாக இருந்து உணவு உள்ளெடுங்கள்.

- குழந்தைக்கு முன்மாதிரியாக இருங்கள். அடிக்கடியான சிற்றுண்டிகளை தவிருங்கள். ஓரிடத்திலிருந்து உணவு உண்பதற்கான ஒழுங்கான இடத்தினை வைத்திருப்பதுடன் உணவு நேரங்களில் வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதனையும் தவிருங்கள்.

**குழந்தைக்கான உணவினைத் தயாரிக்கும் போது குறித்துக் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- ஒரே உணவினை தினமும் கொடுப்பதனால் குழந்தை உணவினை மறுப்பதற்கு வழியமைக்கும்.
- மேலதிகமான முயற்சியின்றி உணவில் வெவ்வேறு வகைகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.
  - ஆறு மாதத்திலிருந்து ஒரு வயது வரை தினமும் படிப்படியாக உணவின் தன்மையினை (துணிக்கைகளின் பருமன்) அதிகரித்தல்.
  - உணவினை சமைக்கும் போது உணவில் வகைகளாக சேர்ப்பதற்காக உணவின் சுவை, தரம்,நிறம்,சமையல் முறை போன்றவற்றை மாற்றுவதற்கு முயற்சியுங்கள்.
  - வெவ்வேறு உணவினைத் தயாரியுங்கள் / வெவ்வேறு வகையில் உணவினைத் தயாரியுங்கள் அதாவது தேங்காய்ப்பால் சேர்த்து தயாரித்தல், பொரித்தல் அல்லது தாளிதம் செய்தல், வறை, சலட் போன்றனவற்றை வயதிற்கேற்ப குறைந்தளவிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனைத் திரவியங்களுடன் வெவ்வெறு வகையில் சேருங்கள்

- ஒரு உணவுடன் கறியாக கொடுக்க முடியும்.
- நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் வீட்டில் விசேடமானதும் போஷணை நிறைந்ததுமான உணவினைத் தயாரியுங்கள். குழந்தை கவரக்கூடிய வகையில் உணவினை அழகுபடுத்த முடியும்.

**உணவிற்காக குழந்தையை தயார்படுத்தல்**

- குழந்தைக்கு பசியேற்படும் போது உணவினை தன்விருப்புடன் உண்ணும். குழந்தைக்கு பசியேற்படும் போது உங்களுடைய குழந்தை காட்டும்

  அறிகுறிகளை கற்றுக்கொள்ளவும். குழந்தைக்கு உணவூட்ட ஆரம்பிக்கும் முன் குழந்தைக்கு பசியேற்படும் வரை இருங்கள்.

  குழந்தைக்கு பசியினை ஏற்படுத்துவதற்காக

  - இரு உணவுகளிற்கிடையில் பொருத்தமான இடைவெளியை பேணுவதுடன் வயதிற்கு பொருத்தமான உணவு வேளைகளின் எண்ணிக்கையினை வழங்கல்.
  - அடிக்கடியான சிற்றுண்டிகள் மற்றும் பாலுணவுகள் குழந்தைக்கு பசியின்மையை ஏற்படுத்துவதுடன் உணவினால் நிரம்பல் நிலையையும் ஏற்படுத்தும்.
  - குழந்தைகள் இனிப்பு மற்றும் உப்பு சுவைகளிற்கும் அதிகளவிலான எண்ணெய்த்தன்மையான உணவுகளிற்கும் அடிமையாவார்கள். இவ்வாறான உணவினை அடிக்கடியும் அதிகளவாகவும் உட்கொள்வார்களாயின் அவர்களின் வயதிற்குரிய உணவினை உட்கொள்வதற்கு பசி ஏற்படாது விடும்.
  - குழந்தையை வயதிற்கேற்ப விளையாட அனுமதித்தல், சமையலறையில் உங்களிற்கு உதவுதல், வீடு மற்றும் தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தி சுறுசுறுப்பாக வைத்திருத்தல் மூலம் குழந்தைக்கு பசியினை ஏற்படுத்தும்.

- குழந்தைக்கு உணவு உண்பதற்காக குழப்பங்கள் அற்ற பொருத்தமான குறிக்கப்பட்ட இடத்தினை வைத்துக் கொள்ளுங்கள்.
- குழந்தைக்கென வேறான உணவுத்தட்டம், கிண்ணம் மற்றும் கரண்டியினை வைத்துக் கொள்ளுங்கள்.

**உங்களுடைய குழந்தைக்கு உணவு ஊட்டும்போது**

- குழந்தையை உணவு உண்பதற்கு முன்பு அதனுடைய கைகளை கழுவிக் கொள்வதற்கும் உணவினை ஓர் இடத்திலிருந்து உட்கொள்வதற்கும் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

  முக்கியம் - குழந்தையின் உணவு தயாரிக்கும் முன்பும் உணவூட்டலின் முன்பும் கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள்

- வீட்டை அல்லது தோட்டத்தை சுற்றி நடந்து கொண்டோ அல்லது தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி அல்லது வேறு திரை சாதனங்களில் குழந்தையின் கவனத்தை மாற்றுவதன் மூலம் உணவூட்டலினைத் தவிர்க்கவும்.
- உணவூட்டும் போது குழந்தையுடன் அன்புடனான கண்ணுடன் கண் தொடர்பினை வைத்திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் வாசிப்பவருக்கே சொந்தம்

சு.சஞ்ஜய்
தரம்-04
கிளி/வேரவில் இ.ம.வி



வாசிப்பு என்பது வெறும் புத்தகங்களை மட்டும் கற்பதல்ல புத்தகம் மனிதனின் சிறந்த நண்பன் "கண்டது கற்க பண்டிதனாவான்" எனும் முதுமொழி இதனை பறைசாற்று கின்றது.வாசிப்பு இல்லாமல் கற்றல் எனும் செயற்பாடே நிறைவு பெறாது ஒரு சிறந்த வாசகனால் மட்டுமே சிறந்த எழுத்தாளனாகமுடியும். ஒரு சிறந்த எழுத்தாள னால் மட்டுமே சிறந்த பேச்சளாகமுடியும். ஆகவே மனித தொடர்பாடலில் மையப் புள்ளியே வாசிப்பு ஆகும்.

எவன் ஒருவன் வாசித்தவனாக இருக்கிறானோ அவன் மனதில், அறிவும், அறியாமையும் ஒளிவிடும் படிந்திருக்கும். வாசிப்புஎன்பதுஒருமனிதனின்குழப்பமானமனநிலையை அகற்றி நன்னிலைப்படுத்த உதவுகின்றது. இதேபோன்று புதிய விடயங்கள் மனதில் இடம்பிடித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வாசிப்பு ஏற்படுத்துகின்றது.

மேலும் நல்ல நூல்கள் எமக்கு சிறந்த வழிகாட்டியாக அரவணைக்கும் தாயாக, தைரியமூட்டும் தந்தையாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் நண்பனாக பல்வேறு பாத்திரங்களை வகிக்கின்றது. ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படு கின்றது! என்றும் விவேகானந்தர் கூறியுள்ளார். உலகில் தோன்றிய எல்லாத் தலைவர்களும் வாசிப்பதன் மூலம் தம்மை முழுமைப்படுத்திக் கொண்டவர்கள்.

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன்! என மகாத்மா காந்தி கூறியுள்ளார். இதேபோன்றுதான் உலகின் தலை சிறந்த தத்துவ ஞானியான சோகர்டீஸ் தனக்கு நஞ்சூட்டப்படும் வரை வாசித்துக் கொண்டு இருந்தார் என்று வரலாறு கண்ட உண்மை. வாசிப்பதன் மூலம் ஒருவனது மொழித்திறன் விருத்தி சொல்வன்மை பொது அறிவு, வளர்ச்சி தன்னம்பிக்கை ஆளுமை விருத்தி ஞாபகசக்தி, அதிகரிப்பு, கிரகித்தல என்பன எம்முன் வளர்கிறது. எனவே மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு வாசிப்பு. வாசிக்காதவன் அரைமனிதன் வாசிப்பவனே முழு மனிதன் ஆகின்றான் எனவே இவ் உலகம் வாசிப்பவர்க்கே சொந்தம் ஆகும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் பல்லவராயன் வரலாற்றுப் பார்வை

பல்லவராயன் சிலை
ஏற்பாட்டுக்குழு.

கி.பி 10 நூற்றாண்டில் வன்னி பெருநிலப்பரப்பில் சுயாட்சியுடைய நகரங்களையும், இராணுவ கட்டமைப்புக்களையும் வைத்து ஆட்சி செய்த சிற்றரசர்களுள் பல்லவராயன் வீரத்தின் அடையாளமாகி நிற்கின்றான்"

இலங்கை வரலாற்றில் கிளிநொச்சி மாவட்டத்தின் "தொன்மைப் பண்பாடும் வரலாறும் இற்றைக்கு 125000 ஆண்டு பழமையானது குறிப்பாக 1970 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் கலாநிதி சீரான் தெரனியாகல இரணைமடு குளப்பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வில் கிடைத்த கல்லாயுதம், தொல்பொருட்கள் இன்றைக்கு 1,25,000ஆண்டு பழமை யானவை எனக் குறிப்பிடுகின்றார்.

கி.மு 3700) ஆண்டளவில் தென்னிந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்த நுண்கற்கால மக்கள் வன்னிப் பிராந்தியத்தில் இரணைமடு." மாங்குளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களிலும் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் 70 இடங்களில் குடியேறி வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

இப்பண்பாட்டு வழிவந்த மக்கள் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்து முதலில் வட இலங்கையில் குடியேறி வாழ்ந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு புலம்பெயர்ந்தனர் எனக் கூறப்படுகின்றது. கிளிநொச்சியின் பூநகரியின் மண்டக்கல்லாறு மற்றும் மண்ணியாற்றுப் பகுதியில் 1982, 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளிலும் பார்க்க இரணைமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த கற்கருவிகள் தொழில்நுட்பம், கலைநயத்துடன் கூடியனவாக காணப்படுகின்றன என பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

2000 ஆண்டு பழமையான பெருங்கற்கால குடியிருப்புகள் பூநகரியின் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழவூர் பல்லவராயன்கட்டு, குஞ்சுப் பரந்தன், மாந்தை போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. இங்கு பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள், ஈமச்சின்னங்கள், ஈமத்தாளிகள், கருப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், இந்திய உரோம நாணயங்கள், கல்மணிகள் என்பன நிலையான குடியிருப்புடனும் சிறந்த நகர நிர்மானத்துடனும் பொருளாதாரக் கட்டமைப்புடனும் கி.மு.3ம் நூற்றாண்டில் பூநகரி பிராந்தியம் திகழ்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பூநகரி கிராஞ்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிகால மக்கள் பயன்படுத்திய சுடப்பட்ட மண்ணைக் கொண்டு கட்டிய கிணறுகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்துக்குரியவை என பூநகரி அகழ்வாய்வில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 ஆம் ஆண்டு பேராசிரியர் புஸ்பரட்ணம் பூநகரி கல்முனை தொட்டு மாதோட்டத்தின் தெற்கே வீரபாண்டியன் முனை வரையுள்ள பூநகரி பிராந்தியத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வில் 2000 ஆண்டு பழமையான பெருங்கற்கால மக்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா பல்லவராயன்கட்டு ஈழவூர், குதிரைகட்டினதீவு போன்ற இடங்களில் பரவி வாழ்ந்தமைக்கான சுடுமண் உருவங்கள், கருப்பு- சிவப்பு மட்பாண்டங்கள், சுடுமண் பாவைகள், அகல்விளக்கு எழுத்து குறித்த மட்பாண்டம், நாணயம், கல்மணிகள், மீன்பிடி உபகரணங்கள், கண்டுபிடிக்கப்பட்டன.

குறிப்பாக பூநகரி மண்ணித்தலையில் கிடைத்த மண்பாண்ட சாசனத்தில் "ஈழ எழுத்தை குறித்த மட்பாண்ட பகுதி கண்டுபிடிக்கப்பட்டது இது 2300 ஆண்டு பழமையானதாகும் ஈழம் என்பது வட இலங்கையைக் குறிக்கப் பொதுவாக பயன்படுத்தப்பட்ட பெயராகும் பட்டிணப்பாலையில் வரும் "ஈழத்து உணவும் காலத்து ஆக்கமும்" என்னும் வரிகளில் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டவை பற்றி குறிப்பிடப்படுகின்றது.

"தெங்கும் பனையும் ஈழவர் ஏறாப்பெறாதாராவும்" என்று சில நிலமானியம் தொடர்பான கல்வெட்டு குறிப்புகளில் வருகின்றன தற்போது வடஈழத்தில் பூநகரியில் உள்ள கிராஞ்சி என்ற கிராமம் முன்னைய காலத்தில் "ஈழவூர்" என அழைக்கப்பட்டமை இங்குள்ள ஓலைச்சுவடிகளில் இருந்து அறியப்படுகின்றது.

அண்மைக காலத்தில் "ஈழம்" என்ற பெயர் பற்றி ஆய்ந்தறிந்த அறிஞர்கள் ஈழம் என்பது ஒரு தமிழ்ச்சொல் எனவும் அச்சொல் பனை வளத்தோடு தொடர்புடையதாக தோன்றிய பெயர் எனவும் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகின்றார் ஈழம் என்ற பெயர் பனைவளம் நிறைந்த வட ஈழத்தை அல்லது வட ஈழத்தின் ஒரு பகுதியை குறிக்கும் ஒரு பெயராக இருந்திருக்கலாம் காலப்போக்கில் முழு நாட்டையும் குறிக்கும் பெயராக மாறி இருக்கலாம் என கருத வாய்ப்பு உண்டு என் அறிஞர்கள் கருதுகின்றனர்.


பூநகரியின் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட நாகபடுவான் கிராமத்தில் கடற்கரையை அடுத்துள்ள காட்டுப் பகுதியில் கானா மோட்டை குளக்கட்டுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது சைவசமய அடையாளங்கள் ஏராளமாக கண்டுபிடிக்கப்பட்டன அகழ்வாய்வில் தாழியின் உடைந்த பாகங்கள் பல வடிவங்களில், பல அளவுகளில் அதிக அளவிலான சுடுமண் சிலைகள், சிற்பங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் பூநகரி கரியாலை நாகபடுவான் அகழ்வாய்வின்போது ஏராளமான சைவ சமய அடையாளங்கள் கடவுள் உருவங்கள், சுடுமண் உரு வங்கள், ஆண், பெண் தெய்வ சிலைகள், இலிங்க வடிவங்கள், நந்தியின் பாகங்கள், ஆமை, யானை, கருடன் முதலான சிற்பங்கள் நாக உருவங்கள், தனி சிற்பங்கள், மண்பானைகள், சட்டிகள், தெய்வச் சிலைகள் பீடங்களுடன் இணைந்த வகையில், சில தட்டை யான சட்டியின் விளிம்பில் ஐந்து நாகத்தின் தலைகள் 5 நாகத்தையும் இணைந்த நிலையில் அவற்றின் வால் பகுதி சட்டியின் மையத்தில் சுருண்ட நிலையில் காணப்பட்டது இவை அனைத்தும் அண்மைக் காலத்தில் நாகபடுவான் அகழ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவையாகும் இது நாக வழிபாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டுவதுடன் 2200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து பெருங் கற்கால வழிவந்த மக்கள் நாகவழிபாட்டை மேற்கொண்டனர் என்பது இலங்கையில் பூர்வீக குடிகளான நாகர்கள் நாகபடுவான் மட்டுமல்லாது வடபகுதி தொட்டு தென்னிலங்கை வரை ஏராளமாக பரவி வாழ்ந்துள்ளனர் என்பதை அண்மைக் கால ஆய்வுகள் உறுதி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாம்புப் புற்றை நாகவழிபாட்டிற்குரிய ஆலயமாக வழிபடும் மரபு பண்டுதொட்டு இருந்து வருகிறது. வன்னிப் பெரும் நிலப்பரப்பில் ஊற்றுப்புலம், இரணைமடு தென்மராட்சியில் எருவன், வலிகாமத்தில் மானிப்பாய், நவாலி போன்ற இடங்களில் இன்றும் பாம்புப் புற்றுக்கு படையல் செய்யும் மரபு காணப்படுகின்றது. சில இடங்களில் கற்களால் அமைக்கப்பட்ட ஆலயத்தின் கருவறையில் பாம்புப் புற்றைப் பிரதான தெய்வமாக வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது இக்குலமரவே கரியாலை நாகபடுவானிலும் நிகழ்ந்துள்ளது என்பதையும் இலங்கையின் ஆரம்பகால மக்கள் நாகவழிபாட்டு வழிவந்த மக்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.



**தமிழ் மாமன்னன் மாவீரன் பல்லவராயன்**

ஈழத்தில் தமிழர்களின் ஆட்சி உரித்தையும், தொன்மையையும் எடுத்தியம்பும் வரலாற்றுச் சான்றுகள் ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்புக்களாலும் கட்டமைக்கப்படு கின்றன.! அதனடிப்படையில் வன்னிப் பேரரசின் வழிவந்த குறுநில மன்னர்களுள் ஒருவனாக, பதினெண் தொழில்சார் குடிமக்கள் சகிதம் வன்னியின் பூநகரியை ஆண்ட பல்லவராய மன்னன் சிறப்புப் பெறுகிறான்.

அவனது ஆட்சி எல்லையாக வடக்கே மண்டைக் கல்லாறும், தெற்கே முழங்காவிலும், கிழக்கே வன்னேரியும், மேற்கே பொன்னாவெளியும் வரையறுக்கப்படுகின்றன. பல்லவராயனது ஆட்சிக் காலத்தில் வடபகுதியான அரசபுரம் என்னும் நிலப்பரப்பை அல்லிராணி என்னும் அரசியும், மாந்தையெனும் நிலப்பரப்பை கரிகாலன் என்னும் சிற்றரசனும் ஆட்சி புரிந்ததாக அறியமுடிகிறது.

உழவுத்தொழிலை முதன்மைப்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டிருந்த பல்லவராய மன்னனின் ஆட்சி, அத்தொழில் சார்ந்த பிற பதினெட்டு தொழில்களையும் முதன்மைப்படுத்திய மிகச் செழிப்புற்ற ஆட்சியாக அமைந்திருந்தது. அதற்கு ஆதாரமாக பூநகரி, பல்லவராயன்கட்டு மற்றும் அதன் சுற்றயல் பகுதிகளில் அத்தொழில்களின் பெயரில் இன்றளவும் காணப்படும் கொல்லங்குளம், பத்தன்குளம், நாகபடுவான் குளம், கரியாலைக்குளம், பண்டிவெட்டிக் குளம், வில்வெட்டிக்குளம், தேவன்குளம், வன்னேரிக்குளம், மண்ணியாகுளம், அம்பலப்பெருமாள்குளம், பூதவுடையார் புளியங் குளம், கரம்பைக்கட்டுக்குளம், வண்ணாம்பிட்டிக்குளம், நாச்சியார் குளம், பன்னாமோட்டைக்குளம், சின்னவன் முறிப்புக்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதுதவிர, வலைப்பாட்டுப் பகுதியிலுள்ள வீரபாண்டியன் முனை, அவ்விடத்தே வழக்கிலுள்ள "ஈழ ஊர்" எனும் தொன்மைப் பெயர், வடபூநகரியின் நாகதேவன்துறை கௌதாரி முனை, மண் ணித்தலை சிவன் கோயில் உள்ளிட்ட தொன்மை அடையாளங்களுக்கும் பல்லவராய மன்னனுடைய ஆட்சிக்கும் இடைத்தொடர்புகள் இருப்பதையும் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: ஒரு குறுகிய நிலப்பரப்பில் பல குளங்களை அமைத்து அவற்றுக்கு ஏற்ப பணிகளையும் விஸ்தரித்து பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் தொழிற் பாதுகாப்புக்குமான ஒரு அடித் தளத்தை அந்தக் காலத்துக்கு ஏற்றாற்போல் கட்டமைத்து ஆட்சி நடைபெற்ற ஊராக பல்லவராயன்கட்டும் அதன் ஆட்சியாளனான பல்லவராய மன்னனும் வன்னியர் ஆட்சி வரலாற்றில் முதன்மை இடம்பெற்றுள்ளனர்.

ஆன்மீகச் சிறப்புப்பெற்றதும் சிற்ப மற்றும் கட்டடக்கலையில் சிறப்புப்பெற்று இருந்ததுமான பல்லவராயன்கட்டு காட்டுப் பிள்ளையார் ஆலயம், வன்னேரிக்குளம் ஐயனார் ஆலயம் என்பவை பல்லவராய மன்னனால் ஆதரிக்கப்பட்ட ஆலயங்கள் என சுட்டிச் சொல்லப்படுகின்றன. பல்லவராய மன்னனின் கோட்டையின் சிதைவுகள் சுண்ணாவில், பல்லவராயன்கட்டு மற்றும் முழங்காவில் பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வடிப்படையிலான பல்லவராய மன்னனது ஆட்சிச்சிறப் பினை, எண்பதுகளின் பிற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறைப் பேராசிரியர் திரு.பரமு புஸ்பரட்ணம் அவர்களால் பொன்னாவெளி புளியந்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவும் கிடைக்கப்பெற்ற எச்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன. அதுபோலவே, நாகபடுவான், குஞ்சுப்பரந்தன், அக்கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மீட்கப்பட்ட நாணயங்கள் உள்ளிட்ட எச்சங்களும் இதனையே எண்பிக்கின்றன.

ஆக, ஈழத்தில் தமிழர்களின் பாரம்பரியத்தையும் ஆட்சிபுரித்தையும், தொன்மை பறைசாற்றும் வகையிலமைந்த பல்லவராய மன்னனின் வரலாற்றை அடுத்த தலைமுறை களுக்கும் கடத்தும் முயற்சியாகவே, பல்லவராயன்கட்டுச் சந்தியில், பல்லவராய மன்னனின் சிலை நிறுவப்பட்டு 2023.06.05 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உசாத்துணை:

1. இலங்கையில் வன்னியர் - கலாநிதி.சி.பத்மநாதன்.

2.பல்லவம் ஆண்டு இதழ் 02 பல்லவராயன்கட்டு பொது நூலக வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் சமூகத்தின் நூலகத்தின் பங்கு

**திரு. றம்சீன் அல்அமீன்**
ஆசிரியர்,
கிளி/ முழங்காவில் தேசிய பாடசாலை.

"ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்" என்றார் சுவாமி விவேகானந்தர் நவீன உலகம் வேண்டி நிற்கும் துரிதமான கல்வியை வழங்கும் ஏதுக்களில் நூலகங்களும் பெரும் பங்காற்றி வருகின்றது. நூல் + அகம் என்பதே நூலகம் நூல்களின் இருப்பிடமே நூலகம். இது ஒட்டுமொத்த நூல்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும். சிறியவர் முதல் பெரியவர் வரை பண்டிதர் முதல் பாமரர் வரை அனைத்து மக்களையும் வேறுபாடு இன்றி வரவேற்பதும் அவர்களின் அறிவுப் பசியை தீர்ப்பதும் நூலகங்களின் பணியாகும். அறிவுசார் சமூகத்தைக் கட்டியெழுப்புவது நூலகங்கள் அடிப்படையானது என்பதை உணர்ந்தாலோ என்னவோ மகாத்மாகாந்தியடிகளை "ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது" ஒரு நூலகம் கட்டுவேன் என்றார்.

நூலகங்கள் உலகில் இன்று நேற்று உருவானதல்ல அவை உலகில் காகிதம் தயாரிப்பதற்கு முன்னதாவே உருவாகி விட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. களி மண்ணை பிசைந்து தட்டையாக உருவமைத்து அதன் மீது கூர்மையான ஆயுதத்தால் எழுதிக் காயவிட்டு எடுத்ததே ஆரம்பகால நூல்களாகும். இவை உலகில் முதல் நூல்களாகவும் கருதப் படுகின்றது. "ஒரு எழுத்தாளன் ஒரு நூலை தொடக்கி வைக்கிறான் வாசகன் தான் அதை முடித்து வைக்கின்றான்" என்ற "அழுவேல் சான்சன்" அவர்களின் கூற்றை நாம் கருத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

இற்றைக்கு 5000 ஆண்டுகளிற்கு முன்னரே பபிலோனியா நகரில் இத்தகைய மண்ணாலான ஏடுகள் பயன்படுத்தப்பட்டன. எகிப்தில் நூல்கள் மரப்பட்டைகளால் ஆக்கப் பட்டன. பின்வந்த காலங்களில் ஏடுகள், மாட்டுத் தோல், கோள புற்கள், ஓலைச்சுவடிகள், மரப் பலகைகள், மெழுகுத் தகடுகள் என வளர்ச்சி யடைந்து இறுதியில் காகிதங்களால் எழுதப் பட்டு இன்று நிலைத்துள்ளது. "புத்தகம் ஒன்றே அழியாத் தன்மையுடையது" என்றார். "ரூபாய் கோட்டோ" அத்துடன் "அறிவாளிகளின் எழுத் துக்கள்தான் எந்தச் சந்ததிகளாலும் திருட முடியாத சொத்துக்கள்" என்றார் அறிஞர் லேண்டர்.

"றோமில் ஜீலியாஸ் ஸீஸர்" தான் பொது மக்களுக்காக முதன் முதலில் நூலகம் ஒன்றை நிறுவியதாகவும் ரோமாபுரியில் செல்வந்தர்கள் நூலகங்கள் நிறுவி நிதி உதவிகள் செய்ததாக வும் கூறப்படுகின்றது. 4ம் நூற்றாண்டில் உரோமில் இம்மாதிரியான 28 நூலகங்கள் இருந்தன. கி.மு. 300களில் எகிப்து நாட்டின் "அலெக்ஸ்சாந்திரியா"வில் பிரசித்திபெற்ற ஒரு நூலகம் அமைக்கப்பட்டதாகவும் இந்நூலகத் தில் "பேப்பைரஸ்" என்ற ஒரு வகைத் தாவரத்தி லிருந்து கடதாசிகள் தயாரிக்கப்பட்டதாகவும் அத்தாவரத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டே "பேப்பர்" என்ற காகி தாளான "எழு இலட்சம் எட்டுச் சுருள்கள்" இருந்ததாகவும் அந்நூலகத்தில் 120 பகுதிகள் வகைப்படுத்தப் பட்டிருந்தாகவும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கின்றதோ அந்த வீட்டில் தான் ஒளி விளக்கு இருக்கின்றது" என்றார். அறிஞர் "பிளேட்டோ" அவர்கள் பண்டைய காலங்களில் அறிவுப் பொக்கிசங்களான நூல்களை மன்னர்கள் படையெடுப்புக்களின் போதும் அழியவிடாது மறைத்து வைத்தார்களாம் சீன மொழியால் நூலகம் என்பதற்கு "ஒழித்து வைக்கும் இடம்" என்று பொருள் உண்டு காலப்போக்கில் ஒழித்து வைக்கும் நிலைமை மாறி பத்திரமாக வைப்பதற்கு பாதுகாப்பான இடம் தேடப்பட்டது. அக்காலத்தில் "கோவில்களே" பாதுகாப்பான இடமாகக் கருதப்பட்டது. இதனாலேயே முன்னைய காலங்களில் புத்தகங்களைப் பூட்டி வைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. சிதம்பரத்தில் நடராஜர் கோவில் கற்பக் கிரகத்தின் பின்னில் இருந்து எண்ணிறைந்த தேவாரப் பாடற் சுவடிகள் கண்டெடுக்கப் பட்டமை. இதற்குத் தக்கசான்றாகும். இது அன்றைய சூழலில் அழிவுசார் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களித்தது எனலாம்.

"பயன்படுத்தப்படாத புத்தகம் வெறும் காகிதக்கட்டுதான்" இது சீனாவில் பழமொழி இன்று உலகிலேயே மிகப்பெரிய நூலகமாக கருதப்படுவது 1400களில் "ஆக்ஸ்பேற்கு" பல்கலைக்கழகத்தில் "சர்தாமஸ்போட்லா" என்பவரால் அமைக்கப்பட்ட "போட்லியன் லைப்ரறி" ஆகும். அடுத்து உலகின் இரு பெரும் நூலகங்கள் என்ற வரிசையில் வாடிகள் நகரத்து நூலகமும், வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் நூலகமும் அடங்கும். இதில் வஷிங்டன் நூலகம் 1800இல் ஏப்ரல் 24இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 3.3 கோடி புத்தகங்களும், ஆக்கங்களும், கையெழுத்து பதிவுகளும் உள்ளன. இங்கு புத்தகங்கள் மட்டும் ஒரு கோடி உண்டு. மாஸ்கோலில் உள்ள லெனின் நூலகத்தில் 2 கோடி புத்தகங்கள் உள்ளன. ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாக கருதப்படுவது "யாழ் பொது நூலகம்" ஆகும் இது 1981 மே 31 இல் எரிக்கப்பட்டபோது சுமார் ஒரு இலட்சம் வரையிலான அரிய பல புத்தகங்கள் இருந்ததாகவும் கூறப்பட்டது.

"எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப் படுகின்றனவோ அங்கு விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்" என்றார் அறிஞர் "சேகுவேரா" அவர்கள் இத்தகைய நூலகங்களின் வீழ்ச்சியும் அறிவுசார் சமூகத்தை கட்டியெழுப்புவதில் தடையாக அமையலாம்.

நூலகம் என்பதை நாம் வாசிகசாலை படிப்பகம், நூல்நிலையம், லைபரி என்றுபல்வேறு விதமாகக் கூறுகின்றோம். லிபர்/லையர் என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்தே லைப்பறி உருவானது இங்கு லைபர்/லிபர் என்பது நூற்றொகுதி எனப் பொருள்படும். நூல்களை சேகரித்து வைப்பதாலேயே அது லைப்பரறி (நூலகம்) ஆனது பொதுவாக நாட்டில் உள்ள நூலகங்கள் நான்கு வகையானவை. அவை,

- ✧ தேசிய நூலகங்கள்
- ✧ பொது நூலகங்கள்
- ✧ கல்வி நிறுவன நூலகங்கள்
- ✧ விசேட நூலகங்கள் என்பனவாகும்.

இந்நூலகங்கள் தன்மையிலும் பருமனிலும் வேறுபட்டவை தேசிய நூலகங்கள் நாட்டிலுள்ள சகல நூலகங்களுடனும் இடைத் தொடர்பை ஏற்படுத்துபவை தேசிய மட்டத்திலான நூலக சேவையையும் ஒருங்கிணைப்பு செய்வது பொது நூலகங்கள் இவை பொது மக்கள் என்ற வகையில் சமூகத்தில் அனைத்து தரப்பினருக்குமான சேவையை வழங்குவது. இரவல் வழங்குவது, இருந்து வாசிக்க இருக்கை வசதிகள் என்பன இதன் உசாத்துணை சேவைக்களாக உள்ளூராட்சி நகரசபை மற்றும் மாநகர சபைகளால் நிர்வாகிக்கப்படுகின்றது.

கல்வி நிறுவன நூலகங்கள் இது கல்விச சேவையை வழங்கும் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், கலாசாலைகள் போன்ற கல்வி நிறவனங்கள் இயங்கும் நூலகங்கள் இவை முழுநேரமாக இயங்குவதில்லை. இங்கு மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்வாசகர்களாக இருப்பார்கள் வரையறுக் கப்பட்ட நூற்றொகுதியைக் கொண்டது.

விசேட நூலகங்கள் இவை குறிப்பிட்ட சிறப்பு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை, வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள் ஆராய்ச்சி நிலையங்களிலுள்ள நூலகங்கள் ஆகும். "உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதேயில்லை" என்றார். "ஆசுகார் வைல்கு" அவர்கள் நூலகங்கள் வாசிப்பு, வாசிப்புப் பழக்கம் என்பவற்றை இலக்காகக் கொண்டு, வாசகர்களை மையமாக வைத்தே எழுந்தன. இந்த வாசிப்பின் மேன்மையை பல்வேறு அறிஞர்களும் விதந்து கூறியுள்ளனர். "கண்டதை கற்றான் பண்டிதன் ஆவான்" என எம்முன்னோர்கள் சும்மா குறிப்பிடவில்லை. அந்தவகையில் "என் மனம் விரும்பும் நூல் களைக் கொடுங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் வாழச் சம்மதிப்பேன்" என்றார். "மாகின்" அவர்களைப் போல நெல்சன்மண்டேலா, பகவத்சிங், மகாத்மாகாந்தி, சிக்மன்புரோய்ட், பிளேட்டோசெரோ போன்றோர் பல நூலக சிந்தனைகளை விதைத்துள்ளார். அவர்களின் வாழ்வும் வரலாறும் புத்தக வாசிப்பு எல்லையை தொட்டு நிற்கிறது.

காலத்தால் அழியாத கல்வியை காலங் களையும் அமைதார்கள் எம்மூத்த குடிகள். வாசிப்பு பழக்கம் ஒரு மனிதனுக்கு இன்றி யமையாதது. வாசிப்பு ஒருவனது அறிவு விருத்தி மட்டுமல்லாது அவனது ஆற்றல், மனப்பாங்கு, சிந்தனை, செய்முறை என்னும் பல்வேறு திறனைகளையும் விருத்தி செய்வதாய் உள்ளது. "தான் கற்ற நூலளவேயாகுமாய் நுண்ணறிவு" என்பது முதுமொழி, வாசிக்க வாசிக்க அறிவு ஊறும் நல்ல நூல்களையே நண்பர்களாக்க வேண்டும் நிலையில்லா மனித வாழ்வில் நாம் வாழும் நாள் கொஞ்சமே ஆனால், நிறைய வாசித்தறிய வேண்டியவர்களாய் உள்ளோம்.

"கல்விகரையிலே கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பாணி பல..."

இடித்துரைக்கின்றது நாலடியார் வாசிப் பான் காலமே ஒருவர் வாழ்நாள் நீடித்த கல்வியைப் பெறுகின்றான் இதுவே வாழ்வை முழுமை பெறச்செய்கிறது. இதனால் தான் வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்கின்றோம். வாசிப்பதனால் மனிதனின் துன்பங்கள் அகலும் சந்தேகங்கள் தெளிவாகும். வாழ்க்கை என்ற அந்தக் கேள்விக்கு விடை தரும் இதனால்தான் ஆங்கில கலைஞர் ஒருவர் "என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே எனக் குறிப்பிட்டார். வாசிப்பு மனிதனுக்கு நிம்மதியை யும் மனநிறைவையும் தருகிறது. "உடலுக்கு உடற்பயிற்சி எப்படி அவசியமோ அவ்வாறே மனதிற்கும் மனப் பயிற்சியாக புத்தக வாசிப்பு அவசியம்" என சிக்மண்ட் புரோய்ட் குறிப்பிடு கிறார். ஆகவே ஓர் அறிவு சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப நூலகங்கள் மிகவும் அவசிய மானவை.

தென்னாபிரிக்க சுதந்த விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா இவர் தன் வாழ்நாளில் அரைவாசிக் காலத்தைச் சிறைச் சாலையிலேயே கழித்தார். ஒரு நாள் அவரை சிறையில் செல்வி கண்டபோது "எனக்கு வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தகம் வாசிக்க மட்டும் அனுமதி கொடுங்கள்" எனக் கேட்டார். இவரது வாழ்க்கை பாடம் "புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்களே புத்தகங்கள்" என்ற லெனின் கூற்றை மெய்ப்பிப்பதாயுள்ளது. தான் தூக்கு தண்டனைக் கைதி என நிச்சயிக்ககப்பட்ட பின்பும் தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக் கொண்டு இருந்தார். (தான்) பகவத்சிங் - நூல் இன்றி நூலகம் இல்லை. நூலகமின்றி மனித சமூகமே இல்லை என்று கூறுமளவிற்கு நூலகங்கள் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்திருந்தது. இருப்பினும் இன்று நூலகப் பாவனை வாசிப்புப் பழக்கம் நலிவடைந் துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடலுடன் பாடலை பார்த்து ரசிப்பதில் தான் சுகமக் சுகம்..." என்ற சினிமாப் பாடல் வரிகளுக்கு வலுசேர்த்தால் போல இன்றைய இளைய சமுதாயம் தொலைக்காட்சிப் பெட்டிக் குள் முகத்தைப் புதைத்து மீளமுடியாமல் தவிக்கின்றது. வேகமாக மாறிவரும் இன்றைய விஞ்ஞான உலகில் வாசிப்பதிலும், நல்ல நூல்களைத் தேடிப் பெறுவதிலும் ஆர்வம் காட்டும் எண்ணிக்கையினர் அருகியே வருகின் றனர். கல்வி கற்றவன் தன்னை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள அறிவாற்றலைப் பெருக்கும் சிறந்த நூல்களைத் தேடி வாசிப்பதில் ஆர்வம் காட்டவேண்டும். ஒரு மனிதனின் அறிவுசார் விருத்தியினை ஏற்படுத்தும் சிறப்புடைய கல்வி யைப்பெற காட்சி, அனுபவம், கேள்வி முதலிய வழிகள் பல உள்ள போதிலும், அவற்றில் தலைசிறந்து விளங்குவது நூல்களே. அந்நூல் களை பொருள் உணர்ந்து வாசிக்க வேண்டும். அவ்வாசிப்பே பயன்மிக்கதாகவும், அறிவின் அடிப்படையாகவும் அமையும். இந்த இடத் திலும், அறிவுசார் சமுதாயத்தைக் கட்டி யெழுப்பும் அடிக்கல்லாகவும் நூலகங்கள் விளங்குகின்றன.

நவீன தொழில்நுட்பத்தால் உலக சுருங்கி விட்டது. அதற்கு பரந்த அறிவும் விரித்த சிந்தனைகளுமே காரணம். இவ்வுலகோடு ஒட்டி வாழவும் எழுகின்ற சவால்களுக்கு முகம்கொடுக்கவும் அறிவுசார் சிந்தனைகளே அவசியமாகின்றது அந்த அறிவுசார் சிந்தனைகளின் வளர்ச்சிக்கு நூலக வாசிப்பு முதன் நிலைபெறுகின்றது. "சிறந்த நூல்களை முதலில் வாசியுங்கள் அன்றேல் அவற்றை என்றும் உங்களுக்கு வாசிக்க சந்தர்ப்பம் கிடையாது" என்றார். பேரறிஞர் தோரே. அவர்கள், வாசிப்புக்கு உகந்த இடம் நூலகம் ஆகும். அந்தவகையில் ஒரு நூலகம் "அறிவுப் பதிவேடுகளின் சுரங்கும்" என்பர். நூலகம் பற்றி கருத்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் கூறும்போது கடலைப் போன்ற நூலகம் அதில் மணலை எடுக்க விரும்புவோர் மணலை எடுக்கலாம். சிற்பி, சோகிகளைப் பொறுக்க விரும்பவோர் அவற்றை பொறுக்கலாம். குளிக்க விரும்புபவர்கள் குளிக்கலாம். காற்றும் வாங்கலாம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"கல்வி அனைவருக்கும்" பிறப்புரிமை" என்ற அடிப்படையில் நமது நாட்டில் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டாலும், ஒருவருக்கு வேண்டிய கல்வி அறிவைப் பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் முழுமையாக வழங்க முடியாதபோதும், நூலகங் களே அந்த இடைவெளியை நிறைவுசெய்து வருகின்றது. இந்த இடத்திலும் அறிவுசார் சமூகத்தை வளர்க்க நூலகங்கள் பெரிதும் பங்காற்றியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயில் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை

## - சிறுகதை

**வலைப்பாடு தி.செல்வகுமார்**
(முகிலன்)

தன்னை அறியாமலே நித்திரையில் அசந்து தூங்கிவிட்ட காந்தன். திடீரென கண் விழித்து தன்னை பல தடவைகள் அழைக்காத தாயின் குரலை கேட்கவில்லையே என எண்ணியவாறு கண்களை கசக்கியபடி அம்மா வின் படுக்கை அறையை சரிந்து பார்த்தான். தாயை காணவில்லை போர்வையை எடுத் தெறிந்து பிள்ளைகளை விலக்கிவிட்டு தாயின் படுக்கை அறைக்கு சென்று கதவினை விலக்கி எட்டிப் பார்த்தான் காணவில்லை தான் வேலை உடல் அனுப்பினால் அசந்து தூங்கியதால். தன்னை எழுப்பி தான் எழும்ப வில்லையே என எண்ணியவாறு தான் படுத்துறங்கிய அறையில் சென்று தனது மனைவி சுகந்தியிடம் குரல் கொடுத்தான். மெல்ல அவனின் உடலில் தட்டி "சுகந்தி சுகந்தி இஞ்செருங்கே அம்மாவை கானெல்ல" என்று உடனே கண்விழித்தெழுந்து பதறி யடித்து "மாமியைக் காணலேயா" என்ற வாறு சுகத்தி திடீரென எழுந்து மேசையில் கிடந்த மின்விளக்கை எடுத்துக் கொண்டு காந்தனுடன் வீட்டின் சுற்றுப்புறச் சூழல் எல்லாம் பார்த்தார்கள். காணவில்லை வீட்டின் வெளிக் கதவை பார்த்தார்கள் கதவு திறந்து காணப் பட்டது. சுகந்தி ஓடிச்சென்று கடிகாரத்தின் நேரத்தைப் பார்வையிட்டாள். அதிகாலை 2.00 மணி இதற்குள் மாமி என்னை இரண்டு அல்லது மூன்று தடவைகள் அழைத்திருக்க வேண்டும். என எண்ணியவாறு கண்கள் குளமாக அழைத்துக் கொண்டு வெளிக் கதவினால் வீதியை நோக்கி சென்று கொண்டிருந்தனர். வீதியின் இருபுறமும் இரவின் மின் விளக்கை கண்டு நாய்கள் இடைவிடாது குரைக்கத் தொடங்கின. நாய்களின் சத்தத்தைக்கேட்டு தனது தூரத்து சொந்தக்கார பரமண்ணை வீதியை நோக்கி மின்விளக்கை அடித்து. "யார் இந்த நேரம் என்றதும் சுகந்தி" அது நான் பரமண்ணை என்றதும் என்ன பிள்ளை இந்த நேரம், இல்லை அண்ணை என்றது வீட்டின் பாடலையை நோக்கி பரமன் அண்ணை விரைந்து வந்து என்ன என மெல்ல குரல் கொடுக்க சுகந்தியின் மனம் படபடக்க கண்களில் நீர்வடிய அத்தையை காணவில்லை என்றதும். "அதுக்கு ஏன் அம்மா கண் கலங்கிரியள் அவ ஊரில் உள்ள அன்னம்மாள் கோயிலுக்கு தான் சென்றிருப்பா வயது முதிர்ந்திட்டு தானே என்றதும் அவர்கள் அசைந்து செல்ல. தான் அயல் வீட்டில் குடியிருப்பதால் சுகந்தி சரஸ்வதி ஆச்சியை மதிக்காது சத்தம் போடுவது நச்சரிப்பதும் காந்தனுடன் சண்டை போடுவதும் சுகந்தி எல்லாம் மறந்து நல்ல பிள்ளையாக காந்தனுக்கு அன்பான மனைவியாகவும் பரமேஸ்வரி அக்காவிற்கு அன்பான மருமக ளாகவும் தற்போது தனது மாமியை காணாத தவிப்பை உணர்ந்தவராய் வீட்டின் கதவை திறந்து உள்ளே சென்ற பரமனுக்கு நித்திரை வரவில்லை. தனது வீட்டில் உள்ள சாய்மனை கதிரையில் அமர்ந்திருந்த பரமனுக்கு காந்தனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை வேலாயுதம் அண்ணை. தாய் சரஸ்வதி இருவரின் வாழ்க்கையும் நிழல் படங்களாக ஓடத் தொடங்கின.


அந்த ஊரிலே மிகவும் செல்வ செழிப்பான வாழ்ந்தவர்கள். மிகவும் இறைபக்தியும், பிறரை மதிக்கும் பண்பு சிறந்த விருந்தோம்பல் அனைவரையும் ஒரே மனப்பாங்கில் எடுத்து செல்லும் பக்குவத்தை வேலாயுதம் அண்ணை யிடமும், சரஸ்வதி அக்காவிடமும் காண முடியும். பல சொத்துக்களுக்கு அதிபதியாக வேலாயுதம் அண்ணனின் தந்தை காலம் தொட்டு வாழ்ந்து வந்த காட்சி மனதை அள்ளி சென்றது. காலம் செல்லச்செல்ல மூன்று பிள்ளைகளை பெற்றனர். இரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையையும் கொண்டு சீரும் சிறப்புமாக கொண்டனர். பிள்ளைகள் மூவரும் உயர்கல்வி வரை கற்று பல்கலைக்கழகம் சென்று மூத்தமகன் மோகன் வைத்தியராகவும், இரண்டாவது மகன் காந்தன் தொழிநுட்ப உத்தியோகத்த ராகவும், இளைய மகள் துவாரகா நாட்டின் இனவிடுதலைக்காக இளைஞர்கள் திரண் டெழுந்தபோது வேலாயுதம் அண்ணனின் குடும்பமும் வீட்டுக்கு ஒருவராக சென்ற காலத்தில் விடுதலைக்காய் விதை யாகினாள்.

வேலாயுதம் அண்ணனின் பிள்ளைகளின் கல்வி அறிவுக் காரணம் அந்த ஊரிலே உள்ள பட்டின சபையில் தலைவராகவும், கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்புக்கள் என்பதில் மக்கள் அவரையே தலைவராக ஏற்றுக் கொள்வார்கள். அவரிடம் இருந்த சிறப்பு பண்பு கிராமத்தில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்கு அள்ளி வழங்கும் கைகள் எப்போதும் அவர் எதைச் செய்தாலும் ஒத்தாசை புரியும் சரஸ்வதி அக்கா சரி பிழை இருப்பின் இருவரும் ஒருவரை ஒருவர் பகிர்ந்து கொள்ளும் தன்மை காலங்கள் உருண்டோட பிள்ளைகள் திருமணம் செய்து வைத்ததும். இளைய மகன் காந்தனுக்கு தனது மனைவி சரஸ்வதியின் உடன்பிறந்த தம்பியின் மகளை திருமணம் செய்து கொடுக்க வேண்டும். தனது தம்பி வறுமையில் வாழ்கின்றான். என்ற எண்ணத்தை வேலாயுதத்திற்கு சரஸ்வதி எடுத்து சொல்ல சரி என கூறிய அந்த நேரங்கள் பரமனின் மனதை வருடிச் சென்றது. இருவரும் அல்லும் பகலுமாக சேர்ந்து உழைத்த வீடு. பங்களா அனைத்தையும் இரு பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்து வாழ்ந்து வந்த நாட்கள் காலம் செல்ல செல்ல வயது முதிர்ந்தவர்களாக மூத்தமகன் மோகனின் வீட்டில் வசித்து வந்தார்கள். இருவரும் அதிகாலையில் கோவிலுக்கு செய்கையில் வேலாயுதம் அண்ணனின் கையில் உள்ள ஊன்றுகோல் வீட்டில் உள்ள செல்வம் சத்தம் எப்பொழுதும் பரமனின் காதில் கேட்கும். இருவரும் ஒன்றாக இருந்து உணவு உண்பதும் வேலாயுதம் அண்ணனின் கைளால் சரஸ்வதி அக்காவினால் பாக்கை சிறிதாக வெட்டி வெற்றிலை, சுண்ணாம்பு தடவி அதனை கையில் வைத்து மசித்து வழங்கும் மனப்பாங்கும் அன்பும் அவர்களுக்கானது.

காலம் உருண்டோட பேரப்பிள்ளை களைக் கண்டுவிட்டோம் என்கின்ற பூரிப்பு இருவரும் தமது பொழுதை பேரப்பிள்ளை களுடன் கழித்துவரும் காலம். மோகன் வீட்டில் மோகனின் மனைவியால் வெடித்த பூகம்பம் பேரப்பிள்ளைகளை தொடக்கூடாது. அவர்களுக்கென்று வீட்டின் அருகில் கொட்டில் ஒன்றை போடுமாறும் தேனீர் கோப்பைகள், உணவுத் தட்டுக்களை தனிமைப்படுத்த தொடங்கினால். வேலை முடித்து மாலைவேளை வீட்டுக்கு மோகன் வந்தபோதும் தாய், தந்தை யுடன் கதைத்து வீட்டுக்குள் வருவதும் காலையில் வேலைக்கு செல்லும்போது ஆசீர் வாதம் பெற்று செல்வதும். மோகனின் மனைவிக்கு எதுவும் பிடிக்கவில்லை. எப்பொழுதும் எரிந்து விழுவதும் அத்தனையும் மோகனின் தாயும், தந்தையும் உணர்ந்து கொண்டார்கள். ஆயினும் காட்டிக் கொள்ள வில்லை. எப்பொழுது வேலாயுதம் மனைவிக்கு கூறும் வசனம் நாங்கள் வாழ்ந்து முடித்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள் அவர்கள் வாழப் போகின்றவர்கள் அன்பாக இருக்க வேண்டும். அதற்காக எங்களை மெழுகுவர்த்தியாக உருக்க வேண்டும் எனும் உளப்பாங்குகளுடன் வாழ்ந்தார்கள்.

நாட்கள் உருண்டோட குடும்பத்திற்கு விபரீதமான விளைவுகள் மோகன் அறிய தொடங்கினான். பல தடவை கூறியும் ஏற்றுக் கொள்ளாத மனைவியிடம் தினமும் பெற்றதாய் தந்தைக்காக மனைவியுடன் சண்டைபோட முடியாது எனக்கூறி தொலைபேசியை எடுத்து தம்பி காந்தனிடம் கதைத்தான்.

காந்தனும் தனக்கு இருவரையும் வைத்து பார்க்கமுடியாது தான் வேலைக்கு செல்வ தாகவும் கூறியதும், மோகனின் கண் களிலிருந்து கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் கரை புரண்டு ஓடியது. எனினும் இது தம்பி தானாக கதைக்கவில்லை. தம்பியை பின்னால் கதைக்க வைப்பதை உணர்ந்தவனாய் நாட்கள் செல்ல காந்தன் நேரடியாக அண்ணன் மோகன் வீட்டுக்கு வந்து பல நேரம் அண்ணனும் தம்பியின் விவாதத்தின் பின்னர். அம்மாவை தன்னிடம் தருமாறு அப்பாவை நீங்கள் வைத்து பராமரிக்குமாறு கூறியதும். காந்தனின் கண்களில் இருந்து நீர் ஓடியது. அதனைக் கண்ட மோகன் தனது இருக்கைகளாலும் தம்பி காந்தனின் கண்களை துடைத்து அழவேண்டாம் எனக் கூறி தலை அசைத்தான். காந்தன் தந்தை, தாயிடம் சென்று தந்தையின் கால்களைத் தொட்டு வணங்கி கன்னங்களில் முத்தமிட்டு தந்தையிடம் மெல்ல எடுத்துக்கூறி அம்மாவை தான் அழைத்து செல்வதாக நீங்கள் அண்ணா வுடன் இருக்குமாறு கூறியதும். வேலாயுதம் வாய்விட்டு அழுதான் எப்போதும் ஒன்றாக இருந்த எம்மை கடவுள் பிரிக்க முன்னர் பிள்ளைகள் பிரிக்கின்றார்களே என கண் கலங்கி சரஸ்வதியும் வாய்விட்டு அழுது இருவரும் கைகோர்த்து கட்டி அணைத்து கை அசைத்து வாசல்வரை சென்று காந்தன் தாயை தனது மகிழுந்தில் ஏற்றி செல்ல வேலாயுதம் கை அசைத்து விடை கொடுத்தார். அப்போது காந்தனின் மகிழுந்தில் உள்ள வானொலிப் பெட்டியிலிருந்து சோதனைமேல் சோதனை போதுமாடசாமி என்ற பாடல் சரஸ்வதியின் அழுகை மீண்டும்மீண்டும் வரவழைத்தது. அன்றிலிருந்து தன்மேல் வானம் இடிந்து விழுந்ததைப்போல் தனிமையாக இருந்து அழுவதும் பேரப்பிள்ளைகளை அள்ளி அணைக்கமுடியாது தவித்தார். நாட்கள் செல்ல உணவை குறைத்து உடல் மெலிந்து தனது மனைவியைச் சென்று பார்க்கமுடியாது தவித்தார். சில நாட்கள் செல்ல மரடைப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் அண்ணனின் உயிர் பிரிந்தது. ஊரே கூடி அழுதது. வீடு எங்கும் துக்கம் மக்கள் கண்கலங்கி நின்றனர்.

மெல்லமெல்ல காந்தனின் வீட்டில் தாயை தினமும் திட்டி தீர்க்கும் பங்கு சுகந்தியால் அரங்கேற்றப்பட்டது. காலையில் வேலைக்கு சென்று மாலை வீடுவரும்போது தாயின் கண்களில் நீர் குளமாவதைக்கண்டு காந்தனின் கண்களும் கலங்கி நிற்கும். ஆயினும் குடும்பத்தில் விட்டுக்கொடுப்பு பிள்ளைகளின் வாழ்விற்காக மனதை கல்லாக்கி வாழ்ந்தான். தனது தாய் தனது தம்பியின் மகளை கட்டாயம் திருமணம் செய்யவேண்டும் எனவும் போது தனக்கு உணவு பரிமாறும்போது கதைக்களை நினைத்து கண்கலங்கிய தாயின் முகத்தை பார்த்தான். தாய் காட்டிக் கொள்ளாது இயல்பாகவே இருந்தாள். ஆயினும் அத்தனையும் காந்தனுக்கு நன்கு தெரியும் நாட்கள் உருண்டோட ஒரு நாள் சுகந்தி "இஞ்சே இண்டைக்கு சொல்லுறன் உங்கடை அம்மாவை வைச்சு பார்க்க ஏலாது கொண்டுபோய் முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டுவரும் இல்லையென்றால் வீண் பிரச்சினை வரும் என்றதும் காந்தன் அழுதான். எனினும் தாய் இப்படி துன்பப்படுவதைவிட முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டால் எப்போதும் தான் சென்று பார்க்கமுடியும். இப்படி தினமும் துன்பப்பட்டு எனது தந்தை இறந்ததைப் போல் அம்மாவையும் இழக்கமுடியாது என நினைத்து கிராம சேவையாளரிடம் உண்மையான ஒப்பு தலை வழங்கி அனுமதி பெற்று மகிழுந்தில் ஏற்றி கண் கலக்கத்துடன் முதியோர் இல்லம் சென்றடைந்தான் அங்கே சென்றது தனது மனைவியுடன் உடன்பிறந்த அண்ணானும் தன் தாயுடன் முதியோர் இல்லத்தில் நின்றான். காந்தன் உடனே சென்று என்ன மச்சான் இங்கை வந்தனியாள் என்றதும் ஒன்றுமில்லை மச்சான் எனச் சொல்லி விம்மிவிம்மி அழுதான். அப்போது காந்தன் வீட்டுக்கு வீடு வாசல்படி என நினைத்து தனது தாயைக் கொண்டு சென்று பதிவுகளை மேற்கொண்டு அழைத்துச் சென்று முதியோர் தங்கும் இல்லத்திற்கு செல்ல அங்கு தாய் கண் கலங்கி காந்தனின் தாயைக் கட்டியணைத்து சம்மந்தி உங்களுக்கும் இந்த நிலையா? இத்தனை பிள்ளைகளைப் பெற்றும் இன்றைக்கு ஒதிக்கிட்டம் என கதறி அழுதான் பின்னர் சுகந்தியின் அண்ணனிடம் மாமியை என்னிடம் விடுமாறு கூறியதும் சுகந்தியின் அண்ணானும் தாயும் அழுதார்கள். தான் வீட்டில் சந்தோசமாக வைத்திருப்பதாகக் கூறி காந்தன் மாமியரை அழைத்துச் சென்றான். வாசலில் மகிழுந்து நின்றதைக் கண்ட சுகந்தி எட்டிப் பார்த்தாள். கதவைத் திறந்து தனது தாய் இறங்குவதைக் கண்டு ஓடிச்சென்று தாயின் காலைகளைத் தொட்டு நிமிர்ந்ததும் தாயின் கண்களிலிருந்து கண்ணீர் மல்க காந்தன் மனைவிக்கு கதையைக் கூற காந்தனைக் கட்டியணைத்து தான் அறிந்தும் அறியாமல் பிழை செய்தேன் என்னை மன்னிக்குமாறு கூறி. கெஞ்சி மன்றாடி முதியோர் இல்லம் நோக்கிச் சென்று தனது மாமியாரின் கால்களை இறுகப் பற்றியபடி தரையில் கிடந்தாள். தன்னை மன்னிக்குமாறு கூறு என்னால்தான் மாமாவை இழந்தீர்கள். எனினும் என்னை ஏற்கவேண்டுமெனக்கூறி மாமியாரை முத்தம் கொடுத்து பேரப்பிள்ளைகள் இடப்புறமும் சுகந்தி வலப் புறமாக கையைப் பிடித்து தலையைத் தடவி வீடு வந்து சேர்ந்தார்கள். திடீரெனப் பறவைகளின் சத்தம் காதில்பட காட்சிகளை அனைத்தும் ஒரு கனவைப்போல நிஜமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My School

**I.Fathima Inera**

Grade-5
Don Bosco School of Excellence,
Pallavarayankattu.




My school name is Don Bosco School of Excellence. It is in Pallavarayankattu, Poonakary. It is an English medium school. My school is a primary school. There are more than 130 students who are coming from various places. My school has many classrooms, a computer room, and a music room. There is also a very beautiful play ground in my school. It also has two buses to bring the students for the school from their places. My school principal's name is Rev. Fr. Melvin Roy. There are 15 teachers who are well educated. Though our school is English medium. We always speak and study all the subjects in English. My school is the one and only English medium school in Poonakary Division. I am in grade 5 and I love to study in my school with good spirit in my school. All in all we are also going to get a new school building recently.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரயான்-3

**செல்வன் ராஜ்மோகன் பானுயன்**
ஜெயபுரம் தெற்கு.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஜூலை 14, 2023 அன்று மதியம் 2.35 மணிக்கு சந்திரயான்-3 திட்டத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. சந்திரயான்-3 இந்தியாவுடையது.

அதன் முன்னோடிகளான சந்திரயான்-1 மற்றும் சந்திரயான்-2 ஆகியவற்றின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, லட்சிய சந்திர பயணம்.

சந்திரயான்-3 இந்தியாவின் இரண்டாவது சந்திரனின் மேற்பரப்பில் ஒரு மென்மையான தரையிறக்கத்தை அடைய முயற்சிக்கவும். இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (ISRO) மேற்கொள்ளப்பட்ட திட்டமாகும்.

சோதனைகளை நடத்த ரோவர் மற்றும் மதிப்புமிக்க தரவு சேகரிக்க. சந்திரனின் புவியியல், கனிமவியல் மற்றும் எக்ஸோஸ்பியர் ஆகியவற்றைப் படிப்பதில் இந்த பணி கவனம் செலுத்துகிறது.

சந்திரயான்-3, சந்திரனின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கத்தை நிரூபிக்கவும், சந்திரனில் ரோவர் உலாவுவதைக் காட்டவும் மற்றும் இன்- சிட்டு அறிவியல் சோதனைகள். பணி நோக்கங்களை அடைய, லேசர் & RF அடிப்படையிலான அல்டிமீட்டர்கள், வேகமானிகள், உந்துவிசை அமைப்பு போன்ற பல மேம்பட்ட தொழில்நுட்பங்கள் லேண்டரில் உள்ளன.

அத்தகைய மேம்பட்ட தொழில்நுட்பங்கள் புவி நிலைகளில் வெற்றிகரமாக, ஒருங்கிணைந்த குளிர் சோதனை, ஒருங்கிணைந்த சூடான சோதனை மற்றும் லேண்டர் லெக் மெக்கானிசம் செயல்திறன் சோதனை போன்ற பல லேண்டர் சிறப்பு சோதனைகள் திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மற்றும் விண்வெளி ஆராய்ச்சியில் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சந்திரயான்-3 வெற்றியடைந்தால், அது வெற்றியடையும்உலகளாவிய விண்வெளி சமூகத்தில் இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்துதல். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய துறைகளில் பணிபுரிய இளைய தலைமுறையினரை இந்த பணி ஊக்குவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிர்ந்து நில்

ஐங்கரன் இந்துஷா
MOH வீதி,
ஜெயபுரம் தெற்கு.

கல்வி என்பது வேறு, அறிவு என்பது வேறு கல்வி வெணியில் இருந்து கற்றுக் கொள்வது. அறிவு என்பது உள்ளிருந்து வெளிப்படுவது. நிறைய நிறைய கற்றுக் கொள்வது நன்று ஆனால் உள்ளிருக்கும் அறிவினை வெளிப்படுத்த தயங்காதே.

பறவை ஒன்று கிளையின் மீது அமர்ந்திருப்பது அந்த கிளைகளை நம்பி அல்ல, அதன் இறகுகளை நம்பி தான் கிளை முறிந்து விட்டால் பறவை தனது இறகுகளால் பறந்து விடும், கிளை முறிந்து விட்டதே என்று கிளையுடன் சேர்ந்து கீழே விழாது.

எடுக்கின்ற முயற்சிகளை முடிந்த வரை முயற்சிப்பதை விட்டு முடியும் வரை முயற்சியுங்கள் வெற்றிப்பாதை எட்டிய தூரத்தில் இருக்கும். கடலில் ஒருவன் குதித்து முத்தெடுக்காமல் வந்தால கடலில் முத்து இல்லை என்று அர்ததமல்ல, அவனுடைய முயற்சியிலே குறைவு என்று தான் அர்த்தம். இருட்டு மனிதர்கள் எது வேணாலும் சொல்லட்டும் வெளியிலே உலகம் வெளிச்சமாக தான் உள்ளது.

எத்தனை தெய்வங்கள் மீது நாம் நம்பிக்கை வைக்கலாம் ஆனால் நம் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அது பிரயோசனம் ஆகாது. போராட துணிந்த யாருக்கும் வெற்றிக் கதவுகள் சிறந்தே இருக்கின்றன.தோல்வி வந்தால் எழுந்து விடு எழாமல் இருப்பது வாழ்க்கையின் முழு தோல்வி தோல்வியினை படியாக்கி வெற்றியின் சிகரம் தொடு முடியாது என்றால் புழு கூட பட்டாம் பூச்சியாக முடியாது.

விழுந்து கிடந்தால் சிலந்தி கூட சிறை பிடிக்கும்
எழுந்து நடந்தால் எரி மலை கூட வழி கொடுக்கும்
விதைகளுக்குள் தான் மரமே உள்ளது
உனக்குள் தான் உலகமே உள்ளது
நிலக்கரி தான் வைரமாகும்
கனவுகள் தான் நிஜமாகும்

முடியாது என்று நின்று விட்டால் மூச்சுக் காற்று நின்றுவிடும், முடியும் என்று புறப்பட்டால் மூளைக்குள் மின் சாரமும் பிறப் பெடுக்கும், தன்னம்பிக்கை என்னும் நெருப்புப் பொறியை மனித மனம் தங்கி நின்றால் எண்ணியவை எண்ணியது போன்று நடக்கும் இடையூறுகள் எரிந்து சாம்பலாகும். நீ நினைத்தால் மட்டுமே மாற முடியும். மாறு உலகமே அழகாகும்.

துணிந்துவா!

தூக்கிவிட ஆயிரம் பேர் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயபுர கிராமம் அமைந்த வரலாறு

**திரு தம்பிராசா இரவீந்திரன்**
ஓய்வு நிலை அதிபர்
ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன்கட்டு

**முன்னைய காலத்தின் வரலாறு**

யாழ் மாவட்டத்தின் நிர்வாகத்தில் பழமையான பூநகரி பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பின் உதவி அரசாங்க அதிபர் தற்போது பிரதேச செயலகம், ஆக தரமுயர்த்தப்பட்ட நிலையில் 1984ம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டமாக பிரிவுபட்டு அதன் நிர்வாகத்தில் உள்ளடக்கப்பட்ட பூநகரி பல்லவராயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் 1983ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக வன்முறைகளின் மூலமான இடப்பெயர்வினால் இப்பிரதேசம் தோற்றம் பெற்றது. குறிப்பாக மலையகப் பிரதேசமான மாத்தளை, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு,போன்ற பிரதேச மக்களை குடியமர்த்துவதற்காக இப்பிரதேசம் தேர்ந்தேடுக்கப்பட்டது.

இதன் அமைவிடம் வனாந்தரப் பகுதியாக இப்பிரதேசம் இருந்தபோதிலும் மேற்கே மன்னார் யாழ் பிரதான வீதியும், தெற்காக பல்லவராயன் கட்டு கிராம அலுவலர் பிரிவும் வடக்காக சுண்ணாவில், திக்குவில் வடகிழக்காக எத்தாவில், கிழக்காக பண்டிவெட்டி,காடாகவும் இந்தக் காட்டில் பாலை, முதிரை, வீரை, நாவல், ஆத்தி, வறள் நிலை வளரிகள் போன்ற மரங்களும் பற்றைக்காடுகளாக கின்யா, விண்ணாங்கு, காயா, போன்ற மரங்களும் காட்டு விலங்குகளாக யானை, கரடி, பன்றி, குரங்கு, மான்,மரை போன்றனவும், பறவைகளாக மயில், காட்டுக்கோழி, புறா, கொக்கு, காகம் போன்றனவும் வாழ்விடமாகக் கொண்ட இப்பிரதேசம் உயர்வான மணல் கலர்ந்த நீர் பற்றி வைக்கமுடியாத ஆற்று அரிப்புக்கு உட்படுத்தப்பட்ட மியாந்தர் அமைப்பினால் உருவாக்கப்பட்ட நிலம் என்பதனால் எங்கும் அலை நிலமாக தோற்றம் அளிக்கின்றது.

இப்பிரதேசம் பயிர்செய்கைக்கு உட்படுத்தப்படும் போது மழைக் காலங்களில் பயிர்களில் இருந்து பலன் பெற ஏதுவான நிலை காணப்பட்ட போதிலும் ஆழமான கிணற்றில் இருந்து நீர் பற்றுந்திறன் குறைவாக இருப்பதனால் நீர்பாச்சுதல் மூலம் பயன் பெறுதல் குறைவடை கின்றது.

இப்பிரதேசத்தின் அண்டைக் கிராமாக தெற்கே பல்லவராயன்கட்டு கிராமத்தின் அமைவிடம் பிரதான வீதியின் ஆதிகால குடியிருப்புக்கள் கிராஞ்சி வெளியினால் வருகின்ற கடல் நீரின் உட்புகுதலால் பிரதான வீதியை அண்டிய குடியிருப்புக்கள் உவர் நீரினால் கைவிடப்பட்டு பல்லவராயன்கட்டு மக்கள் மாதிரிக் கிராமம், சோலை போன்ற இடங்களில் நெருக்கமாக குடியேறி வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் ஆதாரமாக கைவிடப்பட்ட தபாலகம், பிரதேச சபை உபஅலுவலகம்,கிளி. பல்லவராயன்கட்டு ஆரம்ப பாடசாலை, குடியிருப்பு என்பனவற்றின் எச்சங்கள் அங்கு இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

பிரதான வீதியில் இருந்த பல்லவராயன் கட்டு கிளிநொச்சி வீதியை ஒரு காட்டுப் பாதையாகக் கொண்ட ஒற்றையடிப் பாதையாகக் கொண்டு ஜெயபுரம் வடக்கு, தெற்காக தற்போது கிராம அலுவலர் பிரிவுகளாக இருக்கின்ற முன் ஜெயபுரம் கிராம அலுவலக பிரிவாக தோற்றம் பெற்று 1,1/2 ஏக்கர் நிலங்கள் குடும்பங்களுக்கு வீட்டுக்கு - ஏக்கரும், தோட்டத்திற்கு 1 ஏக்கரும், வயற்காணி 1 ஏக்கர் என்பதும் அரசரினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயிக்கப்பட்டமைக்கு அமைய பயனாளிகள் தெரிவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

புங்குடுதீவு சர்வோதயம், விஸ்வ இந்து சர்பந் சர்வோதயம், கத்தோலிக்க சபை, தென்இந்திய திருச்சபை, இந்நிறுவனங்கள் பொறுப்பேடுத்து காடு அழித்து இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகளும், திறந்த கிணறுகளும் அமைத்துக் கொடுத்திருந்த வேளையில் இடர்பாடான காட்டுப் பிரதேசம் என்பதனால் நோய் தாக்கங்கள் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக பிரதேசம் முழுமை யடையமுடியாத நிலைமையும் காட்டு விலங்கு களில் நடமாட்டத்தினால் 1990ம் ஆண்டு ஏற்பட்ட நாட்டின் அசாதாரண நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்றுவிட 1991.10.21 பூநகரி பிரதேசத்தின் இடம்பெயர் வினால் இப்பிரதேசத்தின் வாழ்விடங்கள் வெறுமை யாக இருந்தமையும், பிரதேச செயலகம், பிரதேச சபை, கிளி பூநகரி மகா வித்தியாலயம், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம் பொருள், கடற்றொழில் சமாசம் புனர்வாழ்வுக்கழகம், இதர சமூக அமைப்புகளும், பூநகரி சுற்றியல் கூற்று வைத்திய சாலை, முழங்காவில் வைத்தியசாலையுடன் இணைக்கப் பட்டது.

இப்பிரதேசத்தின் 1989ம் ஆண்டு சர்வோதயம் இயங்கிய இடத்தில் ஆரம்பிக்கப் பட்ட பாடசாலை 1989ம் ஆண்டு 1 - 5 வரையான தற்போதைய கிளி ஜெயபுரம் மகாவித்தியாலய மாக தரமுயர்ந்து நிற்கின்ற வளாகத்தில் "80 x 20' கொண்ட கீற்றுக் கொட்டகையாகவும் மண் சுவரினால் செப்பனிடப்பட்ட பாடசாலையாகவும், கிளி பூநகரி கொத்தணிப் பாடசாலையும், கிளி பூநகரி மகாவித்தியாலயமும், 1991ம் ஆண்டு இடம்பெயர்ந்து மூலதாரப் பாடசாலையில் இதர பாடசாலையும், கிளி முழுங்காவில் கொத்தணி யில் நிர்வாக வளாகத்தில் இருந்து கிளி ஜெயபுரம் பாடசாலை மரங்களின் நிழலிலும், தற்காலிக கீற்றுக் கொட்டகைகளையும் அமைத்து one–c பாடசாலையாக கிட்டதட்ட 1200 மாணவர் களை கொண்டு இப்பாடசாலை இயங்கியது. இதனால் இப்பாடசாலையின் வருகையானது பல்லவராயன்கட்டு வன்னேரி, வேரவில், கிராஞ்சி போன்ற உயர்தர மாணவர்களின் கலை, வர்த்தக மாணவர்களுக்கு இடமளித்து நின்றது. ஆசிரியர்கள் சில பாடங்களுக்கு யாழ்ப்பாண பிரதேசங்களில் இருந்து வருகை இன்மையினால் உள்ளூரில்தொண்டராசியர்களையும்இணைத்துக் கொண்டு இப்பாடசாலை இயங்கியது.

தொடர்ந்து இப்பிரதேசம் 1995 ம் ஆண்டு யாழ் இடப்பெயர்வும் 1997 இல் கிளிநொச்சி இடப்பெயர்வினாலும் இக்கிராமம் அபிவிருத்திடை வதற்கு ஏற்ற சூழ்நிலையைக்கொண்டு அதிகப் படியான மக்கள் வாழக்கூடிய நிலைமையும் 2002 மீளவும் இயல்புச் சூழல் ஏற்பட்ட நிலைமை யினால் இங்கு இருந்த செயற்படு நிலையங்கள் பூநகரிக்கு சென்று உபஅலுவலகங்கள் தோற்றம் பெற்றன. மீண்டும் 2006ம் ஆண்டு திரும்பவும் இப்பிரதேசத்தில் நாட்டம் கொண்டு மக்கள் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 2007ம் ஆண்டு நடுப்பகுதியில் நாட்டின் அசாதாரன சூழ்நிலை யினால் முழுமையாக மக்கள் இடம்பெயர்ந்து 2010ம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்பு இப்பிரதேசத்தில் உபஅலுவலக நிர்வாக அமைப்புக்களுக்கு உட்பட்டு மின்சாரம், பிரதான வீதி, குடிநிர், சுகாதார வசதிகள், ஏற்படுத்தப்பட்டு காணிகள் மீண்டும் வழங்கியும் குடியேற்றங்கள் பெற்றும் இப்பிரதேசங்கள் சிறந்து விளங்குவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இப்பிரதேசத்தில் முழுமையான குடி யேற்றம் என்பது சாத்தியமில்லாத நிலைமை யும் அடிக்கடி குடியேற்றம் தளம்பல் நிலைக்கு உட்படுத்தப்படுவதும் ஏனைய கிராமங்களுக்கும் இப்பிரதேசத்தின் வளர்ச்சி தடைகற்களாக இருப் பதையும் அவதானிக்க முடிகின்றது.

ஏதுவான சூழ்நிலைகள் ஏற்படும் இடத்து பூநகரி பிரதேச செயலகமானது பிரிக்கப்பட்டு பல்லவராயன்கட்டு பிரதேச செயலகமாக இயங்கும் நிலைமையும் அரசினால் அனுமதிக்கப் பட்டுள்ளமையால் இப்பிரதேசம் நகரமாக மாறு வதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலை பல்லவராயன் கட்டில் எழுந்தருளியிருக்கும் நாகபூசணி அம்பிகையின் வரலாறு

**திருமதி சதீஸ்வரன் அனுசா**
சோலை பல்லவராயன்கட்டு.

**நேர்காணல் பத்மநாதன் மகேஸ்வரி**

**(நல்லையாவின் மகள்)** சோலை பல்லவராயன்கட்டு.

1969ம் ஆண்டு பல்லவராயன் கட்டில் வாழ்ந்த மூதாதையான நல்லையா - தங்கம்மா என்பவருக்கு கனவிலும், நேரிலும் நினைவுகளிலும் நாதன் தோற்றி தன்னை ஆதரிக்கக்கூறி 1970ம் ஆண்டு பெத்தான் தரை வயற்கரையிலுள்ள பிட்டியில் பால், பழம் வைத்து ஆதரித்து வந்துள்ளார். அவர் ஒவ்வொரு நாளும் ஈர உடையுடன் பித்தளைத் தட்டத்தில் பாலும் பழமும் கரைத்து வைத்து பொழுது நாகபாம்பு வந்து பால் குடித்தது. அப்பகுதியில் மூதாதையான செல்லமுத்து ஆச்சி அப்பகுதியில் குடியிருந்தார். அப்பகுதியில் அவர் நடந்து சென்ற பொழுது நாகம் அவருடைய சேலைத் தலைப்பில் கடித்து இழுத்தது செல்லமுத்து ஆச்சி பயந்து நல்லையா என கூவி ஒடியதாகவும் அப்பொழுதில் இருந்தே நாகபூசணி அம்மனின் புகழ் ஊருக்குள் பரவப்பட்டது. தங்கம்மாவுக்கு நோய்வாய்ப்படடபோது நாகபூசணி அம்பிகையை ஆதரிக்க ஆளில்லாமல் போய் விடுமெனக் கூறி வைத்தியசாலைக்குச் செல்ல மறுத்துள்ளார். அப்போது நல்லையாவின் அண்ணாவான சுப்பிரமணியம் என்பவர் தான் அதனை ஆதரிப்பதாகவும் அதன் பின்பு புளியம் மரத்தடியில் சூடு வைக்கப்பட்ட களத்தில் சூலம் வைத்து பால், பழம் வைத்தும் பொங்கல் வைத்தும் பல்லவராயன்கட்டு மக்கள் வழிபட்டனர்.

தூர இடங்களில் உள்ள மக்களின் கனவில் தோன்றி தன்னை வணங்குமாறு அம்மன் கூறியதாக பக்தர்கள் கூறுகிறார்களா. கரியாலை நாகபடுவான் குளம் நிரம்பி வீடுகளும், வயல்களும் முட்டியாதால் அப்பகுதியில் மக்கள் வசிக்க முடியாமல்போனது தண்ணீரும் சவராகியது பல்லவராயன்கட்டு மக்கள் சோலை உயர் பகுதியில் குடியேறினார்கள். அவ்வேளையில் நாகபூசணி அம்பிகை சுப்பிரமணியத்தின் மனைவியான பூரணத்துக்கு கனவில் தோன்றி தன்னை மக்கள் குடியேறிய உயர் பகுதியில் வை எனவும், தனக்கு ஆலயம் அமைப்பதற்கு பத்தர்கள் உதவுவார்கள் என கூறியதாக சொல்லப்படுகிறது. 1985ம் ஆண்டு ஒன்றை காட்டுப் பாதையில் காடு வெட்டி விரமரத்தடியில் இரு சூலம் வைத்து வழிபட்டு வந்தனர். வழிபட்டு வருகின்ற பொழுது சுப்பிரமணியம் மரணித்துள்ளார. அன்று சூலம் வைக்கப்பட்டிருந்த வீரமரத்தடியில் நாகம் ஒன்று செத்துக் கிடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறு குடிலாலயமாக அமைந்த ஆலயம் மீள்குடியமர்வின் பின் மிகவும் சிறப்பான முறையில் மகாகும்பாபிசேகம் நடைபெற்றது. எமது ஆலயம் வளர்ந்துள்ளது அன்று வீரமரத்தடியில் வைத்து வழிபட்ட சூலம் இன்று வரை வழிபட்டு வருகின்றது. இதுவே நாகபூசணி அம்பிகையின் சிறப்பு ஆகும்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாத விழிப்புணர்வு செயற்பாடுகள் ஒக்டோபர் 2023







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத விழிப்புணர்வு செயற்பாடுகள் ஒக்டோபர் 2023








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்களும் தீர்மானங்களும்

**சிவகுமாரன் ரவிச்சந்திரன்**
கிளி/ ஜெயபுரம் மகா.வி.

1. நீயும் நானும் நினைப்பதெல்லாம் நிஜங்கள் ஆவதில்லை.
2. தாய்க்கு சேயாய் வருவதெல்லாம் சர்வ ஈசனின் செயலாகும்.
3. இருமனங்கள் இணைவதெல்லாம் இறைவன் போட்ட கணக்காகும்
4. வருவதும் போவதும் வழியில் நடப்பதும் அவரவர் எழுத்தின் முடிவாகும்
5. நினைத்த காரியம் முடிவிலும் இடையினிலும் ஆயிரம் குளறுபடி
6. வீதித்தடைகள் வீண் விபரீதங்கள் விரும்பியோ விரும்பாத வில்லங்கங்கள்
7. நீதித் தொடர்புகள் எதும் இன்றியே நிலையில்லாப் பயணங்கள் தொடர்கின்றன.
8. வாதிட்டு வென்றிடா நிலைகள் தொடர்வதால் வாழ்பவர் ஆழ்பவர்கள் பேதம்
9. பாட்டிலே எழுதுகிறார் மேடையில் முளங்கிறார் தீர்மானங்களா? அன்றேல்
10. றோட்டிலே பறப்பவர் மெங்கினின் வாரிசா? தினமும் உயிர்பலி எடுக்கிறான்.
11. வீட்டுக்குள்ளே மூடங்கியே கிடப்பதால் மனிதன் வேதனை தீர்ந்திடுமா?
12. ஏட்டிக்குப் போட்டியாய் எம்மவர் நடப்பதால் ஏங்கிடும் அமைதி. தோற்றிடுமா?
13. குடும்ப வாழ்வுகள் குழம்பிய நிலையில் திக்குத் தெரியாத தீர்மானங்களாய் பாலகப் பருவங்கள் பலிகுடா ஆடுது
14. நீலத் திரைப்படம் போதைப் பொருட்களால் பண்பாடு விழுமியம் பஞ்சாய் பறக்குது.
15. உடன்பாடு இல்லாத ஊழல்களினாலே எட்டிக்குப் போட்டியாய் எம்மவர் நடப்பதால் ஏங்கிடும் அமைதி தோன்றிடுமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பதிவிற்கு முற்பட்ட காலத்தில் பரதம் பற்றி எடுத்தியம்புதல்

**திருமதி ஜீவரூபன் லிங்காஜினி**
ஆசிரியர்,
கிளி/ ஜெயபுரம் மகா.வி.

பரதம் கலை மிகவும் பழமையானது என்றால் அது பொய்யாகாது. மனிதன் உருப்பெற்று சிந்திக்க முற்பட்டபோது மனிதன் மனிதனாக வாழ மதம், மொழி அவசியமாக்கப்பட்டது. மொழி வளர்ச்சியடையாத நேரத்தில் ஒருவருக்கொருவர் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திக் கொள்ள மனிதன் கை, கால்களை அசைக்கத் தொடங்கினான் முகத்தில் பல பாவங்களை (மகிழ்ச்சி, கோபம், ஆச்சரியம், வெறுப்பு முதலியன) காட்டினான். அப்போதே ஆடற்கலை தோற்றம் பெற்றது.

எழுத்து வடிவம் பெறாத காலகட்டத்தில் அன்றைய நாள் நிகழ்வுகள் குறித்து ஆதார பூர்வமான செய்திகளில்லை. இதையே சரித்திரப் பதிவிற்கு முற்பட்ட காலம் என அழைக்கிறோம். ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் எவ்வாறு ஆடலிலும், பாடலிலும் ஈடுபட்டிருக்க முடியும் என்பதை பற்றி நோக்குவோம்.

வரலாறு துவங்காத உலகத்தின் துவக்கத்தில் பறவைகளும், மிருகங்களும் இயற்கையின் ஒலிகளுக்கேற்ப நடனம் புரிந்திருக்கக்கூடும். மூங்கில்களில் காற்று புகுந்து வெளிப்படும் ஒலிக்கு அசையும் பசுக்கள், மூங்கில்களை கண்டு மயங்கி ஆடும் மயில்கள் போன்றவற்றை இக்கூற்றுக்கு ஆதாரமாக கொள்ளலாம்.

இதைப் போன்றே மனிதன் தனது மகிழ்வை அல்லது துயரத்தை வெளிப்படுத்தவும், பறவை விலங்குகளைப் போல் கத்தவும், அதற்றவும் கைகளைத்கட்டி கரவொலி எழுப்பவும், கைகளால் சில அசைவுகளைக் காண்பிக்கவும் கால்களால் வெவ்வேறு விதமாக தட்டவும் முயன்றான். மனிதர்கள் வெவ்வேறு ஒலி நிலையில் ஒசை எழுப்ப, எழுப்ப அது சிறிது சிறிதாக இசை தோன்றக் காரணமானது. குதித்தல், கைத்தட்டுதல், கைகளின் வெவ்வேறு அசைவுகள் ஒன்று சேர்ந்து நடனமாக வடிவம் பெற்றது.

மந்தைப் பழக்கத்தையுடைய விலங்கினமாகக் கருதப்படும் மனித இன்த்திலும், சமூகப் பண்புகள் காணப்பட்டன. தேவையின் நிமித்தம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கென முயன்றபோது, குரல் வளையும் சிறிது சிறிதாக சீர்பெற்றது. மெல்லமெல்ல அர்த்தம் பொதிந்த தெளிவான ஒலிகள் கிளம்பின. வேலை செய்யும் உடலசைவுகளுக்கேற்ப தாளமும், ஒத்திசையும் பிறந்தன.

மொழி தோன்றாக் காலத்தே கையசைத்தும் மெய்யசைத்தும் காட்டிய குறியீடுகளி லிருந்து ஆடல் பிறந்தது. கூட்டாக மனிதனுக்கு அவன் வாழ்ந்த பூர்வீக நிலையில் வேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடுதல், வாழ்க்கையின் அத்தியாவசியமாயிருந்தன. அதே செயல்களை சில வேளைகளில் செய்து பார்த்தபோது கூத்து அல்லதுஆட்டம் பிறந்தது.

மழையை விரும்பும் மக்கள், முகில்கள் சேர்வதை இடி, மின்னல் மற்றும் மழை பொழிவதையும் செய்து பார்த்து மகிழ்ந்தனர். உண்மை நிகழ்ச்சி பொய்மையாக, மனஎழுச்சியுடன் மனிதனால் செய்யப்படும்போது ஆடல் தானாகவே பிறந்துவிட்டது. இக்கூத்துக்களில் பேசப்பட்ட மொழியே. பண்டைய பாடல்களின் அடிப்படை எனவே கூத்து, இசையாகவும் சமகாலத்திலேயே தோன்றியிருத்தல் கூடுமென்பதும், இவை தோன்றுவதற்கான அடிப்படை, கூட்டு உழைப்பில் ஈடுபட்டோரின் தாள லயத்திற்கேற்ற அசைவுகளே என்பதும் அறிஞர்களின் கூற்று. இவ்வாறு இயற்கையை பிரதிசெய்த மனிதன் தன்னை அறியாமலேயே இசையையும், நடத்தையும் தோற்றுவித்தான். முதலில் தனது உள்ளாந்த அனுபவங்களை, உணர்வுகளை கலையின் மூலம் வெளிப்படுத்திய மனிதன், பிறகு அதை மற்றவர்களை மகிழ்விக்கப் பயன்படுத்தினான்.

கிராமங்கள் தோன்றி வளர்ந்தபோது ஆடல், பாடல் என்பன ஓரளவு சீர்பெற்று கிராமியக் கலைகளாக பரிணமித்தன. இந்த கிராமியக் கலைகளின்றே கவின் கலைகள் அல்லது சாஸ்திரீயக் கலைகள் விருத்தி செய்யப்பட்டன.

# வாசிப்பை நேசிக்க வாரீர்

**செல்வன் பார்த்தீபன். ஆர்த்திகன்**

தரம் 01

கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

கண்டதை கற்றவன்
பண்டிதனாவான்
சகலமும் பெற்றவன்
செல்வத்தனாவான்
வாசிப்பை நேசிப்பவன்
மனிதனாவான்
வாசிக்கும் பழக்கமுடையவன்
வளங்கொண்டவராவான்
மனங் கொண்டு
வாசிப்பை வளர்த்தெடுக்க
நாளும் - நாமும்
முன்வருவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY FAVOURITE SUBJECT

**S.Mowriya**
Grade 05
Don Bosco School of excellence.

English is my favourite subject. I love to learn English stories and poems. Some people find English difficult to understand, but I find it easy. English is simple for me to understand because my mother makes me to study and English lessons everyday. With this practice, I have gained command over English language. I speak English in a very good accent. One day a British was surprised with the way I talked in English. He patted my shoulder and said that I spoke English just like a British, and even better than him. I was very happy with his remarks. I told my parents about the comments given by the British. My parents were proud of me. English is not a tough subject. Simply practice English grammar and text books daily and you shall gain knowledge about it. Read the newspapers daily and try to understand the newspaper, Memories, understand and speak. With continuous practice, you also can gain command over English.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார் காட்டிய பக்திநெறி

**கோ.அரியநாயகம்**
முன்னாள் கிராம அலுவலர்,
ஜெயபுரம்

அன்பையும் ஜீவகாருண்யத்தையும் போதிக்கும் சைவ சமயத்திலே சிவன் பால் உண்மையான அன்பு கொண்டு முத்தியடைந்த நாயன்மார் (63) அறுபத்துமூன்று பேர் உள்ளனர். இவர்களின் அரிய மானிட பிறவியை எடுத்த நாம் பிறப்பு இறப்பு இல்லாத வீடு பேற்றை அடையவதற்கு எவ்வாறு இறைவன் மேல் அன்பு செலுத்த வேண்டுமென்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர்கள் திருமூலநாயனார்

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார் அன்பே சிவமாயதாரும் அறிகிலார்"

எனப் பாடியதன் மூலம் சிவம் வேறு அன்பு வேறு அல்ல என்பதையும் இறைவனால் படைக்க பட்ட ஜீவராசிகளிடம் உண்மையான அன்பை செலுத்த வேண்டும் என்பதையும் எடுத்துரைத் துள்ளார். அதுவே இறைவனை அடைவதற்கு (முத்தி) ஆதாரமாகும்.

இறைவன் தம்மை வழிபட்டு முத்தி யடைந்தவர்களிடம் அவர்களின் அன்பை வெளிக் காட்டுவதற்காகவும் அவர்களின் உண்மை அன்பை அறிந்து கொள்வதற்காகவும் பல சோதனைகளை நடத்தி முத்தியை வழங்குவார். இதனை அவர்களின் வரலாற்றை படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இதனை தன்னலம் இல்லாத அன்பை இறைவன் மீது அன்பு செய்து வழிபட்ட பட்டிணத்தடிகள்

"வாளால் மகவரின் துாண்ட வல்லேன் அல்லேன்
மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்
தொண்டு செய்து நாளா அல்லேன் கண் ணிடந்து அப்ப வல்லேன்
நாளினிச் செல்றாளை ஆவது எப்படியோ திருக்காளத்தி யப்பனுகே

எனப் பாடி சிறுத்தொண்டர் நாயணரைப் போன்று என்னால் இறைவன் மீது அன்பு செய்து தன்னுடைய ஒரேயொரு பிள்ளையை அறுத்துக் கறியாக்கி சிவனுக்கு அமுதுண்ணக் கொடுக்க முற்பட்டதைப் போன்று என்னால் செய்யமுடியாது எனவும் திருநீலகண்டநாயனார் தனது மனைவி தன் மீது சந்தேகம் கொண்டு தன்னை தொடக்கூடாது எனச் சபதம் செய்தபோது இறைவன் மீது கொண்ட தூய்மையான அன்பினால் தனது வாழ்நாள் வரை தனது மனைவியை தீண்டாது இறைவன் மீது அன்பு செலுத்தினார் அப்படியும் என்னால் செய்யமுடியாது எனவும் வேடனாகப்பிறந்த கண்ணப்ப நாயனார் திருக்காளத்தியிலே இருக்கின்ற சிவலிங்கத்தைக் கண்டவுடன் அவர் முற்பிறவியிலே செய்த புண்ணியத்தின் பயனால் அன்பு செய்து ஆறு நாள் சிவனுக்கு பூசை செய்து தனது இரு கண்களையும் சிவனின் துன்பத்தைப் போக்குவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுக்கு கொடுக்க முற்பட்ட வேளையில் அவரை தடுத்து சிவபெருமான் தன்னுடன் கண்ணப்ப நாயணரைச் சேர்த்து முத்திப்பேற்றைக் கொடுத்தார் அவ்வாறும் என்னால் செய்யமுடியாது எப்படி நான் சிவனுடன் சேர்ந்து (முத்தி) பெறக் போகின்றேன் எனப் பட்டிணத்தடிகள் அவர்களின் தூய அன்பை பக்தியை வெளிப்படுத்துகின்றார் நாயன்மார்களிலே சமய குரவர்கள் எனப் போற்றப்படுகின்ற திருஞானசம்மந்தர் ,திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயணார் ஆகியோர் ஒவ்வொரு ஊர் ஊராகச் சென்று ஆலயங்களிலே தமிழ், வேதம் எனப் போற்றப்படுகின்ற தேவாரங்களை பக்தியோடு பாடி இறைவன் அருளினால் மக்கள் குறைகளை போக்கியவர்கள் திருஞான சம்மந்தரும், திருஞாவுக்கரசரும் ஒரு முறை தல யாத்திரை சென்று கொண்டிருந்த போது திருமறைக்காடு எனும் இடத்தில் உள்ள சிவாலயம் வேதங்களானால் நீண்ட காலமாக பூட்டப்பட்டிருப்பதனைக் பார்த்து மக்கள் கேட்டுக் கொண்டமைக்கு அமைய திருநாவுக்கரசு நாயனார்,

“ பண்ணினோர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினால் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினால் உமைக்காண கதவினை
திண்ணமாக திறந்தருள் செய்மினே

என்ற தேவாரப் பதிகத்தை இறைவனை நினைத்து பக்தியோடு பாடிய பொழுது கதவுகள் தானாகத் திறந்தன. மக்கள் பக்திப் பரவசத்தோடு ஆலயத்தை வழிபாடு செய்தனர். திருஞானசம்பந்தர் “சதுரம் மறை தான் துதி செய்து வணங்கும்” என்ற தேவாரத்தை பாடிய பொழுது ஆலய கதவுகள் தானாக மூடிக்கொண்டன. அன்றிலிருந்து ஆலயக்கதவுகள் மக்கள் வழிபாடு செய்ய ஏற்ற விதமாக அமைந்தன.

சுந்தரமூர்த்திநாயனார் தலயாத்திரை போய்க்கொண்டிருக்கும் போது அக்கம் பக்கமாக இருந்த இரு வீடுகளில் ஒரு வீட்டில் அழுகைக்குரலும் ஒரு வீட்டில் கல்யாணவீடும் நடப்பதைப் பார்த்து அழுகைக்குரல் கேட்ட வீட்டிற்கு சென்ற சுந்தரர் அவர்களை விசாரித்தபோது இரண்டு வீட்டிலும் இருந்த இரண்டு நண்பர்களும் குளத்தில் நீராடச் சென்றபோது அழுகைக்குரல் கேட்ட வீட்டில் இருந்த நண்பரை முதலை பிடித்து இறந்து விட்டதால் அவர்கள் அழுவதாக அம்மற்ற வீட்டில் இருந்த நண்பருக்கு கல்யாணம் நடப்பதாகவும் கூறியமையைக் கேட்ட சுந்தரர் அழுகுரல் கேட்ட வீட்டுக்காரரை குளக்கரைக்கு அழைத்துச்சென்று இறைவனை நினைத்து முதலை பிடித்துச்சென்ற சிறுவனை மீட்டுத்தருமாறு வேண்டி பக்தியோடு தேவாரம் பாடிய பொழுது முதலை பிடித்துச் சென்ற சிறுவனை முதலை தனது வாயிலிருந்து உயிருடன் சிறுவனை கொண்டு வந்து கொடுத்தது. இப்படி இந்த நாயன்மார்கள் பல அற்புதங்களைச் செய்து மக்கள் வாழ வழிகாட்டியிருக்கின்றார்கள். அவர்களால் பாடப்பட்ட தேவாரங்கள் இராஜராஜசோழன் காலத்தில் கறையானினால் அரிக்கப்பட்டது போக எஞ்சியவை நம்பியாண்டார் நம்பி என்னும் நாயனாரால் தொகுக்கப்பட்டு 1ம், 2ம் ,3ம் , 4ம், 5ம், 6ம்,7ம் திருமுறைகளாக இப்போது மக்களின் பாவனையில் இருக்கின்றது.

தமிழ்நாட்டில் திருவாதவூரிலே பிறந்த மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் முதல் மந்திரியாக இருந்தவர் இறை பக்தியினால் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு ஆலயங்கள் தோறும் திருவாசகம் பாடியவர் அவரால் பாடப்பட்ட திருவாசகம் 8ம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. அவர் பாடிய திருவாசகங்கள் கல்லையும் கரைய வைப்பவை அதனை திருவாசகத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்துக்கும் உருகார் என அறிஞர் போற்றுவர் பாண்டிய மன்னனால் குதிரை வாங்கி வருமாறு கொடுக்கப்பட்ட 49 ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி திரவியங்களையும் திருப்பெருந்துறையிலே குருத்தமா நிழலிலே சிவபெருமானைக் கண்ட பொழுது தனது வஸ்திரம் முதலாக எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்படைத்து ஆலயங்கள் தோறும் பக்தியோடு திருவாசகம் பாடியவாராகிய மாணிக்கவாகசகர்,

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன் சிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைத்தும் செய்கிலை பணிகிலை நெஞ்சே
சூடுகின்றதுமிலை துணையில் மணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறலறிலை செய்வதொன்றறியேனே.

என பாடி அதாவது எனது நெஞ்சமே நீ இறைவனை நினைந்து கூத்தாடுகின்றாயில்லை தில்லையிலே நடனம் செய்கின்ற நடராசப் பெருமான் மீது அன்பு செலுத்துகின்றாயில்லை எலும்பு உருகும் விதமாக பக்தியோடு இறைவனைப் பாடவில்லை வணங்கவுமில்லை யாரும் துணையற்றதாகிய இறந்த பின் பிணமாக இருக்கின்ற நெஞ்சமே உன்னை சேர்வதற்கு வழிதெரியாமல் இருக்கின்றறேன் என புலம்புவது போல இந்த திருவாசகம் அமைந்துள்ளது இப்படி அவர் ஆலயங்கள் தோறும் திருவாசகம் பாடி கடைசியாக சிதம்பரத்திற்கு வந்து திருக்கோவை எனும் பதிகத்தை படிக்க சிவபெருமான் எழுதிமுடிவிடத்திலே ஆரூரன் படிக்க அம்பலவன் எழுதியது என எழுதி கையொப்பமிட்டு விட்டு ஆலய வாசல்படியில் புத்தகங் களை வைத்துவிட்டு மறைந்து விட்டார் பொழுது விடிந்ததும் சிதம்பரத்திலே இருக்கின்ற அந்தணர் வாசல்படியில் புத்தகங்கள் (ஏடு) இருப்பதைப்பார்த்து அதிலே எழுதியிருப்பதைப் பார்த்து மாணிக்கவாசகரிடம் இதன் பொருள் என்னவென அந்தணர்கள் வினவினர் மாணிக்கவாசகர் தில்லையிலே இருக்கின்ற நடராசப்பெருமானைச் சுட்டிக்காட்டி அவர்தான் இதன் பொருள் என கூறிவிட்டு நடராசப் பெருமானோடு ஆலயத்துக்குள் சென்று பாலோடு நீர் சேர்ந்த தன்மை போல இரண்டறக்கலந்து மறைந்து விட்டார். இதனை திருவாதவூரர் புணத்தைப் பாடிய முனிவர்

"செய்காட்டும் கமுகடவித்தில்லையுளார் பொருள் கேட்க
கைகாட்டி தம்முருவம் காட்டாமல் மறைந்தாரை
பைகாட்டும் புற்றரவப் பணிக்குடையார் தமக்கன்பு
மெய்காட்டி பாலுடனே மேவிநீராக்கினர்"

என்னும் செய்யுள் மூலம் விளக்கியுள்ளார்.

இவ்வாறு 63 நாயண்மார்களும் மக்களோடு மக்களாக வாழ்ந்து இறைவன் மீது உள்ள பக்தி மேலீட்டினால் பல அற்புதங்களைச் செய்து மக்களை வழிகாட்டி இறைபதம் (முத்திபேறு) அடைந்து விட்டார்கள் அவர்கள் பாடிய தேவார திருவாசகங்களை பக்தியுடன் படித்து அவர்கள் வழியை பின்பற்றி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் அவசியம்

**தர்சினி பரமசிவம்**
ஆசிரியர்,
ஜெயபுரம் தெற்கு,
பல்லவராயன்கட்டு.

"விலங்கோடு மக்கள் அனையர்
இலங்கு நூல் கற்றரோடு ஏனையவர்" இது வள்ளுவரின் வாக்கு

கல்வி ஒரு மனிதனது அறிவு கண்களை திறந்து பகுத்தறிவை உருவாக்கி அவனை வழிநடத்துகின்றது.

கல்வி ஒருவனுக்கு ஏன் அவசியம்? இக்கட்டுரையில் இதனை சொல்லவே விளைகின்றேன். கல்வியின் அவசியத்தை அறிபவன் கல்வியை வெறும் தேவையே என்று கருதாது பள்ளிக்கு செல்வது வெறும் கடனே என்றும் கருதாது பிடித்ததை ஆழமாக கற்கும் திறனை வளரப்பான். அதனால் பெற்ற அறிவைக் கொண்டு இவ் உலகை புதிய கோணத்தில் அணுகுவான்.

இன்று சமூகத்தில் வசிக்கும் நாம் இனம், மதம், செல்வம் என பல விதங்களில் நம்மை நாமே பிரித்துக் கொண்டு இவைகளே நிலையான செல்வங்கள் என எண்ணி பெருமிதம் கொள்கின்றோம். இவற்றிற்காக ஒருவருக்கொருவர் முரண்படவும் செய்கின்றோம். "மன்னனும் மாசற கற்றோரும் சீர்தூக்கின் மன்னனில் கற்றோன் சிறப்புடையவன்" என்றார் ஔவையார் இங்கு பதவி, செல்வத்திலும் பார்க்க கற்றவன் சிறப்புடையவனாகின்றான். நாட்டின் அரசனையே வழிநடத்தும் அமைச்சர் சிறந்த கல்வியுடையவராக கண்டிருப்பீர்கள் இவ் உயர்பதவிகளும், பொறுப்புகளும் அறிவுடையோருக்கே சாத்தியமாகின்றது.

ஔவையாரும், திருவள்ளுவரும் வாழ்ந்த காலம் அல்ல இது இன்று உலகம் பல மாற்றங்களை கண்டுவிட்டது. அனைத்து விடயங்களையும் உள்ளங்கைக்குள் அடக்கிவிட்டோம். இதன் விளைவு மாணவர்களது மனதிலும், நடவடிக்கைகளிலும் பல மாற்றங்களை விதைத்திருக்கிறது. நவீன வளர்ச்சிகளை வினைத்திறனாக பயன்படுத்தும் வரையிலும் அனைத்தும் நலமே வலைத்தளங்களுக்குள் மூழ்கி மிண்டு வரமுடியாமல் தொலைந்து போவதற்கும் அல்லது மூழ்கித் முத்தெடுத்து வருவதற்கும் இடையிலான வேறுபாட்டை உணர சிறந்த பகுத்தறிவே உங்களோடு துணைபுரியும்.

கல்வி ஒருவனை சுலபமாக சிந்திக்கவும் திட்டமான முடிவுகளை எடுக்கவும். தைரியமாக இச்சமூகத்தை எதிர்கொள்ளவும் கற்றுத் தருகின்றது. கல்வி வெறுமனே ஒரு தொழிலுக் காகவோ அல்லது பணம் சம்பாதிக்கும் மூலமாகவோ கருதாத வரையில் கற்பதற்கு தடையும் அல்ல எல்லையும் அல்ல நடத்தையில் ஏற்படும் மாற்றமே கல்வி என்கிறார்கள் அறிஞர்கள் கற்பதனால் எமது நடத்தை மாறுகின்றது. அதனூடாக எங்கள் சமூகம் மாறுகின்றது.

பிடித்ததை வாசி தோன்றியதை எழுத தெரியாதவற்றை தெரிந்து கொள்ளமுயற்சி சரியென்பதனை துணிந்து பேசு இவைகள் நாளை உன்னை இந்த உலகத்தையே மாற்றக்கூடிய ஒரு பலமான ஆயுதம் உண்டெனில் அது கல்வி என்கிறார். "நெல்சன் மண்டேலா" எந்த சூழலிலும் ஒருவர் கற்ற கல்வியானது புகழுறவும், போற்றப்படவும் துணையாகிறது. ஆகவே இறந்தும் இறவாய் புகழுடன் வாழ கல்வியை ஆயுதமாக்கிகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் பௌதிக வள முகாமைத்துவம்
# Physical Resource Management in Schools

**திருமதி ஜெயஶ்ரீதர் கோமளா**
கிளி/ ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

**முகாமைத்துவம் (வரைவிலக்கணம்)**

- "சரியானவற்றை மேற்கொள்ளுதல் முகாமைத்துவம் ஆகும்."
- கல்விக்காக அதன் இலக்குகளின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட வளங்களிலிருந்தது உச்சப்பயனை பெறுதற் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாட்டு உத்திகளே கல்வி முகாமைத்துவமாகும்.
- உள்ளீடு ⟶ செயற்பாடு ⟶ வெளியீடு

  (உள்ளீடு inputs)

முகாமைத்துவத்தில் மூன்று முக்கிய அம்சங்கள்

1. அலுவலக முகாமைத்துவம்
2. மனிதவள முகாமைத்துவம்
3. பௌதிக வள முகாமைத்துவம்

**கல்வி முகாமைத்துவம் (Education management)**

- கல்வி முகாமைத்துவம் என்பது பெரும்பாலும் பொதுவாக குறித்தொதுக்கப்பட்ட பொதுக்கல்வி இலக்குகளை எய்துவதற்கான வளங்களுடன் தொடர்புடைய முயற்சிகளாகவே அமைகின்றன.
- இதில் பாடசாலைச் சூழல், கலாசாரம் என்பவற்றின் நெகிழ்ச்சிக்கான வரப்பிரசாதங்கள் உள்ளடங்குகின்றன.

  - மனித வளம் - பௌதிகவளம்

**கல்வியின் முன்னைய போக்குகள்**

- மனித வளத்தை மனித வளத்தால் அபிவிருத்தி செய்தல்.
- போதனை முறைகள்

**கல்வியின் இன்றைய போக்குகள் (21ம் நூற்றாண்டு)**

- உபகரணமயப்படுத்தல்.
- வள உள்ளீடுகள் அதிகரித்தல்.
- அறிவு மைய உலகு (அறிவு மைய உலகு தொழிற்துறை)
- வள முகாமைத்துவம் முக்கியம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வள முகாமைத்துவத்திற்கும் வெளியீடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.
- முகாமைத்துவம் என்பது பயன்படுத்தப்படும் வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் சார்ந்த உத்தியாகும்.
- வள முகாமைத்துவத்தினூடாகவே முகாமைத்துவச் செயற்பாடுகள் உருவாகி நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- நாட்டின் கொள்கைகள், நிறுவனத்தின் இலக்குகள் நோக்கிய தீர்மானங்களின் அடிப்படையில் வளங்களைப் பயன்படுத்திய முகாமைத்துவக் கருமங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
- இலங்கையின் பொதுக்கல்வித் துறையின் செயற்பாட்டுக் களங்களான (Operational fields) பாடசாலைகளின் முகாமைத்துவச் செயற்பாடுகள் பொது நிலையில் ஏற்கனவே குறித்துரைக்கப்பட்டுள்ள கல்வி இலக்குகளை நோக்கிய செயற்பாடுகளாலேயே இயக்கப்படுகின்றன.
- இங்கு வளப் பெறுகை உள்ளிட்ட வள் முகாமைத்துவமே பிரதான முகாமைத்துவச் செயற்பாடாகின்றது.

வள முகாமைத்துவம் →
- மனித வளம்
- பௌதிக வளம்
- கொள்கைகள்,சுற்றறிக்கைகள் ஆவணங்கள், சேவைகள் சார், உள்ளீடுகள்

- பௌதிக வளம் என்பது வெளிப்படையாகப் புலப்படக் கூடியதும் தொட்டுணரக் கூடியளவுமாகும்.
- பாடசாலையின் வினைத்திறன் வெளிப்பாடு என்பது சிறப்பான வள முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.

**பாடசாலை வினைத்திறனும் வள முகாமைத்துவமும்.**

- வினைத்திறன் (Efficlercy) என்பது வளங்கள் மற்றும் உற்பத்திச் செலவு என்பவற்றுடன் தொடர்புடையதாகும்.
- ஒரு தொழில் அல்லது உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளிலிருந்து உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டினையே வினைத்திறன் என்பது குறிக்கின்றது.
- ஒரு தொழில் விளைவு அல்லது விளைவு பற்றியதாகவே வினைத்திறன் என்பது அமைகின்றது.
- பல்வேறு காரணிகளைப் பயன்படுத்தி ஏதாவதொரு பொருளை அல்லது பொருட்களைத் தயாரித்தல் உற்பத்திச் செலவாகும்.
- மாணவர்கள் கல்வியினால் பெற்றுக் கொள்ளும் விளைவு கல்விச் செயன்முறையின் விளைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஏக்கம்

**பி.பிருந்தாபன்**
கிளி/ வேரவில்
இந்து மகா வித்தியாயலம்.

அன்று அன்னையின் கருவறையில் காத்திருந்தேன்
வெளி உலகுக்காக
இன்று என் பாடசாலை மடி சாய்ந்து ஏங்கும் என்
ஏக்கங்கள் தான் இவை



மாறிவரும் மாற்றங்கள் எல்லாம்
மாணவர் நம் மனதை மாற்றாதோ?
என ஏங்குகின்றேன் நிதமும்
பாதுகாப்பற்ற இந்த பாசமற்ற உலகிலே
பாலூட்டிய தாய்கூட பராமரிக்க மறுக்கும்
இந்த பரிதாப நிலை புரிகின்றதா? தெரிகின்றதா?

பட்டதாரியாக்கும் என் பெற்றோர் என்னை
வாழ்வின் பட்டதாரியாக்க மாட்டார்களா?
என ஒலிக்கும் மாணவர் குரல்
வேகத்தோடு வாழ கற்றுக் கொள்ளும் நாம்
விவேகத்துடன் வாழ வழி கேட்டு ஏங்குகின்றோம்.

இழப்புக்கள் தான் எம் வாழ்வின் இறுதி நியதி என
எண்ணி இருப்பதை இழக்கின்றோமே ஆனால்
இழந்து விடா நம் கல்வி இறுதி வரை
தலை நிமிர வைக்க வேண்டுமென ஏங்குகின்றோம்.

விலை யேற்றம் பெற்ற நம் விலைவாசி வாழ்வு
நம் மாணவர் சமூகத்தை விற்று விடுமோ என ஏங்குகின்றோம்
வாழப் பிறந்த நாம் வாழ வழி கேட்கின்றோம்
வரமதனை வல்ல தேவன் வழங்குவார் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைக்கப்பட்ட மனிதத் தன்மையை
மாணவர் நாம் மதித்திடுவோம்
விதைத்திடு வோம் மனித மாண்புகளை
எழுந்திடுவோம் புது உலகுதனை படைத்திடவே.

பசித்திருக்கும் பாலக சமூகமாக
விடுதலை தேடும் மாணவ சமூகமாக
இலட்சியத்தை நாடும் இளைஞர் சமூகமாக
நல் மதிப்பை நாடும் பெற்றோர் சமூகமாக
கல்வியில் நம் ஏக்கங்களை விதைத்திடுவோம்.

தெரியாத பயணங்கள் எல்லாம்
அறியாத மனிதர்கள் எல்லாம்
புரியாத மாற்றங்கள் எல்லாம்
நமக்கு தடையல்ல முன்னேறுவோம் - நாம்
முன்னேறுவோம் முழுமூச்சோடு முன்னேறுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசை

**பி.பிருந்தாயினி**
கிளி/ வேரவில்
இந்து மகா வித்தியாயலம்.

எல்லோராலும் போற்றப்பட
என்றும் நான் உயர
அதிபர் ஆசிரியர்கள் வாழ்த்தி நிற்க
சுற்றமது போற்றி நிற்க
பெற்றவர்கள் கட்டியணைக்க
பரீட்சையில் வெற்றி பெற்று
பல்கலைக்கழகம் சென்று
பல கலைகள் தான் கற்று
ஆசானாக நான் உயர்ந்து
அறிவுரைகள் பல கூறி
கல்வி மானாக நான்
கல்வியறிவு பெற்று
மாபெரும் சபையினிலே
மாலைகள் பல பெற்று
மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்
என்பது எனது ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Why one should learn English

**J.Thirushaliny**
Grade 09
KN/ Jeyapuram M.V.

1. England is the home of the English language
2. English is a language that most people in the world can speak and understand
3. That is why it is called a "world language'
4. They teach in English in many universities in countries where English is not the first language.
5. Most books on science, medicine, law and other subjects are in English.
6. It is the most commonly used language in which these subject are tight.
7. It is the second language taught in most of the schools in any countries.
8. They do so as they know it is the second most useful language in the world to learn.
9. Students in china and Japan want to learn English.
10. India has a very large number of people of different cultures who speak different language.
11. But most educated people in India understand English even though English is not their mother tongue.
12. Books, magazines and newspapers written in English are available in many countries and libraries around the world.
13. It is said that most of the articles written to magazines and, journals are English.
14. Many of them are available on line in the internet.
15. Almst half the number of those articles are written by authors whose mother tongue is not English.
16. Most international organizations do their work in English.
17. English is one of the official languages of the European union and the united motions.
18. It has been accepted as the official language in many countries to unite people who speak different.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. South African is one such country.

20. Go everyone most learn to talk, read and write in English.

21. One of the ways a person can learn that language is for him to read books on matters of interest to him.

22. It would be good if the he can also listen to person speaking in English or even watch TV programmers in English.

23. A know ledge of English would be an asset to may person.

24. A person can travel to any part of the world without difficulty if he can speak English.

25. It is also the language that can help a person to become friends of person whose mother tongues are different.

26. It is specially so in countries like the united kingdom where people from different cantries live.

27. There are more people who speak English in America and India than in English.

28. All these statements show what an important language English is.

29. Tamil is a language older than the English language

30. In any eveant, a person must learn the language of his mother also.

31. Tamil is a language connected to a person culture and even his religion.

32. So everyone of you should learn to read, write and understand your mother tongue as well.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தில் கொள்ளப்படவேண்டிய இளையோர் வன்முறை

**மகிழினி அன்னக்கொடி**
ஜெயபுரம்.

இன்றைய இளையோர் பண்பாட்டில் புதிய உப பண்பாட்டுப் புறவிசைகளின் தாக்கம் காரணமாக இடம்பெறும் சமூக ரீதியாக அங்கீகரிக் கப்படாத, நியமத்திலிருந்து மீறிய நடத்தைகளை இளையோர் வன்முறை எனலாம். இளையோர் வன்முறையானது அவர்களையும் தாண்டி குடும் பங்கள், நண்பர்கள் மற்றும் சமூகம் என உலகளாவிய ரீதியில் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சமூக விவகாரமாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தினால் (World Health organisation) 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில்' இளையோர் வன்முறை யினை பொது சுகாதாரப் பிரச்சினை என குறிப்பிடுவதுடன், ஒரு நபருக்கோ அல்லது குழுவிற்கு எதிராகவோ உடல் மற்றும் உள ரீதியாக தீமையினை விளைவாய் தருகின்ற செயல்களே இளைஞர் வன்முறை என வரையறை செய்கிறது. மேலும் இளைஞன் ஒருவன் பாதிக் கப்பட்டவனாகவோ வன்முறையாளனாகவோ அல்லது சாட்சியாகவோ காணப்படலாம் என்கிறது. தீங்கு விளைவிக்கும் நடத்தைகளாக காணப்படுகின்ற வன்முறைகள் இன்றும் அதிகள வில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இன்றைய இளைஞர்களிடையே பரவும் வன்முறை கலாசாரம் அவர்களின் வாழ்வை பாதிக்கிறது. அறியாமையும் ஒவ்வொரு குற்றத்திற்கு என்ன விதமான தண்டனை என்பதனை அறிய விரும்பாத அலட்சி யப்போக்கும் எதிர்காலத்தின் மீதுள்ள நம்பிக்கை யற்ற தன்மையும் பெரிதும் இன்றைய இளைஞர் கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடக் காரணமாக அமைகிறது. கொலைகள், பாலியல் வன்கொடுமை, குழுவன்முறை, கொடுமைப்படுத்துதல்,

ஆட்கடத்தல் பிற வன்முறைக் குற்றங்கள் மற்றும் தற்கொலை என இன்று சமூகத்தில் பலவாறான வன்முறைகளை இளைஞர்கள் மத்தியில் இனங்காண முடிகின்றது.

எதிர் முகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற இளையோர் வன்முறைகள் அன்றி லிருந்து இன்று வரை தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனை World Health Organization (Geneva) இனால் 2002 இல் வெளியிடப்பட்ட World report on Violence and health என்னும் ஆய்வின் முன்னுரையில் நெல்சன் மண்டேலா அவர்களினால் "இருபதாம் நூற்றாண்டு வன்முறை யால் அடையாளப்படுத்தப்பட்ட நூற்றாண்டாக நினைவு கூறப்படும்" எனவும் "ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான மரியாதை மற்றும் நல்லாட்சி இல்லாத நிலையில் வன்முறை வளர்கிறது மற்றும் பல சமூகங்களில் இளையோர் வன்முறை மிகவும் மேலாதிக்கமாக உள்ளது" எனவும் குறிப்பிடப்பட்டு இருப்பதன் மூலம் இளையோர் வன்முறையின் உலகளாவிய ரீதியிலான தொடர் போக்கு பற்றி தெளிவடைய முடிகிறது. மேலும் World Health Organization (Geneva) இனால் 2002 இல் வெளியிடப்பட்ட Youth Violence எனும் ஆய்விலும் 2000 ஆம் ஆண்டு மதிப்பிடப் பட்டதன்படி 1,99,000 இளைஞர் கொலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றதெனவும் ஒவ்வொரு நாளும் ஒருவருக் கொருவர் வன்முறையின் விளைவாக 10 - 29 வயதுடைய இளைஞர்கள் இறக்கின்றனர் எனவும் 1985 - 1994 தசாப்தத்தில், இளைஞர்களின் கொலை விகிதம் உலகின் பல பகுதிகளிலும் அதிகரித்துள்ளது என கூறுவதன் மூலம் உலக ரீதியிலான இளைஞர்களது வன்முறையின் அதிகரித்த தன்மையினை இனங்காணமுடியும். இவற்றோடு ஆட்கடத்தல், துப்பாக்கிப்பிரயோகம், குடிப்பழக்கம், வீட்டு வன்முறை மற்றும் கொடுமைப் படுத்துதல் அதிகம் இடம்பெற்றதாகவும் கணக் கெடுக்கப்பட்ட 27 நாடு களில் 13 வயதுடையவர் கள் குறைந்த பட்சம் சில நேரங்களாவது கொடுமைப்படுத்துதலில் பாதிக்கப்பட்டு உள்ள மையினையும் இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

World Health Organization இனால் வெளியிடப்பட்ட World report on Violence and health (Chapter-2) என்ற ஆய்வறிக்கையில் தென் ஆப்பிரிக்காவின் மேற்கு பகுதியில் சுமார் 90 ஆயிரம் கும்பல் உறுப்பினர்கள் காணப்பட்ட தாகவும் 1993 இல் குவாமில் சுமார் 110 நிரந்தர கும்பல் குழுக்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் பப்புவா நியூகினியாவில் குற்றவியல் சங்கங்கள் இனங்காணப்பட்டதாகவும் குறிப்பிடுகிறது.

இளையோர் வன்முறையை தூண்டுகின்ற காரணிகளாக மனரீதியான குழப்பநிலை, ஆரம்ப கால சமூகமயமாக்கல் ரீதியான பிரச்சினைகள், பெற்றோர்களின் கவனக் குறைவுகளும் குடும்ப ஒழுங்கமைவும் வறுமை, வேலையின்மை, சமூகப் பாரபட்சமும் புறமொதுக்கலும் புதிய பொழுது போக்கு செயற்பாடுகள், புதிய கலாசார பரவல்கள், விழுமிய விலகல், எதிர்காலம் தொடர்பான ஆர்வமின்மை, கல்வி மற்றும் ஒழுக்கம்சார் தேக்கநிலை, சிறார் பருவ சமூகமயமாக்கல் விளைவுகளும் வடுக்களும், புலப்பெயர்வு, நகர மயமாக்கல், மனதில் உள்ள குழப்பங்கள், தீய நடத்தையின் கட்டுப்பாடின்மை, ஆரம்ப காலத்தின் ஆக்கிரமிப்பு நடத்தைகளும் அது சார் வரலாறுகளும், இளைஞர்களது அதிவேகத் தன்மை, குறைந்த கல்வியறிவு, அதிவேகத் தன்மை, பிறழ்வு நடத்தைகள், மரபணுக் காரணிகள், குறைந்த நுண்ணறிவு, குறைந்த கல்விச்சாதனைகள், தீய சகபாடிகள், பெற்றோரின் போதைப்பொருட் பயன்பாடு, மனக்கிளர்ச்சி, துன்புறுத்தலுக்கு உள்ளான குழந்தை பருவம், நவீனமயமாக்கல், நகர மயமாக்கல், வருமான சமத்துவமின்மை, பலவீனமான நிர்வாகம், வன்முறைக்கு ஆதரவான கலாசாரம், வருமான ஆர்வம், இனம், மொழி, மத மற்றும் கலாச்சார ரீதியிலான புறமொதுக்கல்கள், ஊடக அழுத்தம், இடப்பெயர்வுகள், பாரபட்சம், பொருளாதார வீழ்ச்சி, நுகர்வுக் கலாசாரம், சமூகப் போட்டித்தன்மை, நிர்வாக ஒழுங்கின்மை, இன-மத வேற்றுமைகள், சமுதாய விழுமிய உடைவுகள், அதிக மன உளைச்சல், போதைப்பொருளிலான ஈடுபாடு, சமூகவிரோத நம்பிக்கைகள்சார்ந்த மனோநிலை, மத வாதநோக்குகளில் அலட்சியம், பெற்றோரி னுடைய திருமண நிலை, சமூக அந்தஸ்து மற்றும் இளைஞன் ஒருவனை சூழவுள்ள அவனுடைய குடும்பங்கள், நண்பர்கள் உள்ளடங்களாக உறவு மற்றும் சூழல் சார்ந்து ஏற்படுகின்ற தாக்கங்கள் என பல காரணிகள் இளைஞர்களை வன்முறை செயற்பாடுகளுக்கு தூண்டுகின்றன. இதைப் பல ஆய்வுகளில் தனிமனித, உறவு சார்ந்த, சமுதாய மற்றும் சமூக மட்டம் என வகைப்படுத்தி ஆய்வில் ஈடுபடு கின்றனர். இவை இளையோரை நியமங்களில் இருந்து மீறச்செய்து வன்முறையை நோக்கி மாற்றியமைப்பன.

ஒரு நாட்டினுடைய அனைத்து நடவடிக்கை களுக்கும் இளைஞர்களின் சக்தி என்பது பாரிய ஒரு உந்துதல் விசை ஆகும். நியமங்களில் இருந்து விலகி திசை

மாறிப்போகும் அவர்களை மீள ஒழுங்கு நிலைப்படுத்த வேண்டியது அவசியமான ஒரு தேவையாகும். இளையோர் வன்முறையை நோக்கிய நகர்வை கட்டுப்படுத்தவோ அல்லது குறைக்கவோ வேண்டிய தேவை அனைத்து பிரதிகளிடமும் காணப்படுகின்றது. அந்தவகையில் இடர் காரணிகள் இனங்காணுதல் அதனை வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதலும் அவசியமானது. வன்முறைகளை கட்டுப்படுத்த அல்லது குறைப்பதற்கு இளவயது சமூகமயமாக்கலானது சீராக அமைக்கப்பட வேண்டும், மாணவர்களிடையே கல்வியின் அவசியத்தையும் இளம்பராயத்தினரிடையே கல்வியினுடைய திறமையையும் நாடுதல் வேண்டும், தொழில்நுட்ப அறிவு போதியளவில் பெற்றுக் கொடுத்தலும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வேண்டும், சமூக விலகல் நடத்தைகள் குறித்தும் அதன் பாதிப்பு குறித்தும் ஆழமான அறிவினையும் தெளிவினையும் சிறுவயதிலேயே கற்றுக் கொடுத்தல் வேண்டும் மற்றும் போதுமான அளவு இளைஞர்களுக்கான வேலைகளை பெற்றுக் கொடுத்து வேலையின்மை பிரச்சனைகளை குறைதலும் சுயதொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்தாலும் வேலை சார்ந்த முயற்சிகளை ஊக்குவித்தல் செய்வதன் மூலம் இவ்வாறான பிரச்சனைகளையும் வன்முறை போக்குகளை கட்டுப்படுத்தி அடுத்த தலைமுறை யினரையும் காக்க முடியும்.

சுருங்கக்கூறின் இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் இளையோர் வன்முறை தொடர்பான போக்குகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்வாறான வன்முறையால் ஏற்படுகின்ற விளைவுகளும் விளைவுகளும் அவற்றுக்கு பின்புலமாக அமையும் இடர் காரணிகளையும் அவற்றை வெற்றிகொள்கின்ற உபாயங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. Kashani, J. H., Jones, M. R., Bumby, K. M., & Thomas, L. A. (1999). Youth violence: Psychosocial risk factors, treatment, prevention, and recommendations. Journal of Emotional and Behavioral Disorders, 7(4), 200-210.
2. Ramani.G., The Challenge of Youth Employment in Sri Lanka.
3. ஹரிணி அமர சூரிய., (2010)., Discrimination And Social Exclusion Of Youth In Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பவருக்கே உலகம் சொந்தமானது

**சந்திரகுமார் சானுஜன்**
A/L (2024)

இன்றைய இளம் சமுதாயம் தொடக்கம் வயதான எமது உறவினர்கள் வரை இணையத்திற்கு அடிமையாகி விட்டார்கள். இது உலகமயமாக்கத்தின் விளைவாக அமைந்துள்ளது. இதன் காரணமாகவும் அதில் காணப்படும் நிகழ் நிலை விளையாட்டுக்கள் காரணமாகவும் சிறுவர்கள் பசி, தூக்கம் என்பவற்றை மறந்து அதன் உள்ளே மூழ்கி காணப்படுவதனை தற்காலத்தில் நன்றாக அவதானிக்கமுடிகிறது. எனினும் அவர்களில் அக்கறை கொண்ட எல்லோரும் அவர்களை நல்லவழிப்படுத்த வாசிப்பை அவர்களிற்கு புகட்ட வேண்டும்.

அந்த வகையில் வாசிப்பு என்பது கையெழுத்திலோ அல்லது அச்செழுத்திலோ உள்ளவற்றை கண்களால் பார்த்து வாயால் உச்சரித்து பொருள் உணர்ந்து கொள்வதே வாசிப்பாகும். அந்த வகையில் சிறுவர்களுக்கு சிறுவயதில் இருந்தே அறிவுசெறிந்த நூல்களை அன்பளிப்பாக வழங்கி உலகத்தை அறிய வாய்ப்பளிக்க வேண்டும்.

ஜன்சுடீன் என்பவரிடம் உலகத்தின் சிறந்த கண்டுபிடிப்பு என்ன என்று கேட்ட போது அதற்கு பதில் அழித்த அவர் அதற்கு மனிதனின் ஆகப்பெரிய கண்டுபிடிப்புக்கள் ஏராளமானவை காணப்பட்டாலும் அவற்றினை பயன்படுத்தவும், அவற்றினை அறியவும், புத்தகத்தை வாசித்து அறிவை மேம்படுத்தினாலே அமையும் என்பதை ஜன்சுடீன் என்பர் நன்கு அறிந்திருந்தார்.

இந்தியாவிற்கு சுகந்திரத்தை வழங்கி கொடுத்த அகிம்சை வழி போராழியாக தமது தைரியத்தினாலும் அறிவினாலும் இந்திய மக்களுக்கு ஒளியூட்டியவர். இவரிடம் ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்ற கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் எனக் கூறி முக்கியத்தை காட்டினார்.

தினமும் நல்ல புத்தகங்களை வாசித்து உணர்ந்து கொண்டால் வெற்றிகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு எடுத்துக் காட்டாக மைக்ரேசாபட் நிறுவனத்தின் உரிமையாளரான பில்கேட்ஸ் என்பவர் ஒரு ஆண்டுக்கு ஐம்பது புத்தகங்களை முழுமையாக வாசிப்பார். இதன் மூலம் வெற்றிகளை பெற்றுக் கொண்டு இருக்கிறார்.

மேலும் ஒரு புனித நூலை எழுத தொடங்கினால் இறைவன் அடியெடுத்து கொடுப்பார் என்கின்றனர் இதனை எடுத்துக் காட்டாக சேக்கிழார் பெரிய புராணத்தினை எழுத தொடங்கும் போதே இறைவனே "உலகெலாம்" என்று அடியெடுத்து கொடுத்து இருந்தார். மேலும் நல்ல புத்தங்களை வாசிக்காத ஒருவன் வாசிக்கவே தெரியாதவனைவிட உயர்ந்தவன் அல்ல என்கிறார்கள் அதாவது வாசிக்க தெரியாமல் இருப்பவனைவிட வாசிக்க தெரிந்தும் நல்ல நூல்களை வாசிக்காதவன் வாசிக்க தெரியாதவனைவிட அறிவு குறைந்தவன் என்கிறார்கள். வாசிப்பதன் மூலம் எழுத்தாளத்தை பெற்றுக் கொள்ளமுடியும் கட்டுரை, புத்தகம் என்பவற்றினை எழுதும் அளவிற்கு அறிவு சிறந்து விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அழுத்ததினை வாசிப்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம். இதற்கு சிறைக் கைதிகளுக்கு அதிகமன அழுத்தம் காணப்படும் அதனை குறைப்பதற்காக சிறைச்சாலையில் வாசிப்பை அறிமுகம் செய்து இருந்தார். நெல்சன் மண்டேலா அவர்கள் வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றுகூறி இருந்தார். மேலும் வாசிப்பதற்குரிய நல்ல நூல்கள் எரிக்கப்பட்டால் அங்கே விரைவாக நல்ல மனிதர்கள் எரிக்கப்படுவார்கள் என அறிஞர்கள் கூறி நூல்களை பாதுகாத்து இருந்தனர்.

மேலும் வாசிப்பின் மூலம் நாம் ஏராளமான நன்மைகளை பெறலாம் என்பதை நன்கு அறிந்து இருந்தனர். அந்தவகையில் மொழிப் புலமையினை வளர்த்து கொள்வதற்கு அதன் மூலம் புதிய சொற்களையும் புதிய மொழியியல் அறிவினையும் வளர்க்கின்றது வாசிப்பு இதன் முக்கியத்தை விவேகானந்தர், ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஓரு ஊரில் ஓரு சிறைச்சாலை மூடப்படும் எனகிறார். அவ்வளவிற்கு வாசிப்பு மனிதனுக்கு அறிவினையூட்டுகிறது.

மேலும் வாசிப்பானது மூளை வளர்ச்சிக்கு வாசிப்பு இன்றியமையாததாக அமைகிறது. மூளையானது சுறுசுறுப்பாக செயற்பட்டு வதற்கும் வாசிப்பு அதிகமாக பங்களிப்பு வழங்குகிறது. அதாவது உச்சரிக்கும் போது அதனை செவிமடுத்து மூளையானது பொருளை விளங்கி கொள்ளும் இந்த செயற்பாடடின் மூலம் தொடர்ச்சியாக சுறுசுறுப்பாக உணர்வுகளை கடந்து அறிவினை வளர்க்கும். இதற்கு எடுத்துக்காட்டாக எமர்சன் என்ற அறிஞரின் கூற்று பொருத்தமானதாக அமைகிறது. அதாவது இந்த வாழ்வின் ஆகச்சிறந்த கேளிக்கை , கொண்டாட்டம் ஒசை இன்றி நடக்கிறது. அதுதான் புத்தகம் வாசிப்பு என்றார் எமர்சன்.

மேலும் வாசிப்பின் மூலம் பகுத்தறிவு விருத்தி ஆகிறது அதாவது நூல்களை வாசிப்பதன் மூலம் பகுத்தறிவினை மேலும் விருத்தியடைய செய்யமுடியுமாக உள்ளது. ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனை காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி என்று ஜிலியச்சீர் கூறியுள்ளார். அதாவது ஆயிரம் நூல்களை கற்றவன் சிறந்த பகுத்தறிவு கொண்டவனாக காணப்படுவான் அவனை தொடர்ந்தால் வாழ்க்கை சிறக்கும் என்று உணர்த்தினார்.

மேலும் வாசித்தலின் மூலம் உயர்ந்தவர்களாக பல அறிஞர்கள் விளங்குகின்றனர். வாசிப்பின் மூலம் மித மிஞ்சிய மேன்மை அடைந்து பெருமை அடைந்தவர்களாக அப்துல் கலாம், மகாத்ம காந்தி, நெல்சன் மண்டேலா, லெணின் போன்றவர்கள் வாசிப்பின் மூலம் உயர்ந்து விளங்குகின்றனர்.

கண்டதும் கண்க பண்டிதன் ஆவான் அதாவது அறிவு ஆற்றல் நிறைந்த நூல்களை கற்பதன் மூலம் பண்டிதன் ஆகலாம் இதன் மூலம் வாசிப்பின் முக்கியத்துவமும் உலகத்தில் வாசிப்பவர்கள் அடைந்த சிறப்பும் எடுத்துக் காட்டப்படுகிறது.

மேலும் புத்தகங்கள் ஒருவனுக்கு நல் வழிபடுத்தும் சிறந்த ஆயுதமாகவும் வழிகாட்டியாகவும் அறிவினை பெற்று தரும் ஆசானாகவும் கடமையாற்றுகின்றது. இதற்கு வள்ளுவர்

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

அதாவது அறிவு வாய்ந்த நூல்களை ஆழமாக கற்கும் போது முழுமையான அறிவு கிடைக்கும் என்கிறார்.

மேலும் ஔவையார் "நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" மனிதன் தன் ஆயுள் காலத்தில் எந்தளவிற்கு நல்ல நூல்களை கற்கிறானோ அந்தளவிற்கு அறிவாற்றல் வளரும் என்கிறார் புத்தகத்தினை மேலிருந்து கீழாக படித்தால் நம்மை கீழிருந்து மேலாக உயர்ந்தும் ஆகவே வாசிப்பதன் மூலம் உலகத்தினை சொந்தமாக பெற்றுக் கொள்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊரும் நூலகமும்

ஜெ.ஜெயஷாலினி
தரம் 02
கிளி/ஜெயபுரம் மக.வி.

எங்கள் ஊர் சிறியது
எழில் மிகுந்த ஊரது
எங்கும் பசுமை கொண்டது
எவர்க்கும் பிடிக்கும் ஊரது

நான்கு பக்கம் வீடுகள்
நடுவில் அமைந்த மைதானம்
பாங்குடன் விளங்கிடும்
எழுகதிர் கல்வி நிலையமும்



பல்லவன் ஆண்ட மண்ணதில்
விருட்சமாய் விளங்கிடும்
தேடிக் கல்வி பெற்றிட
தேன்கூடாம் பல்லவ நூலகம்

தேவைக்கேற்ற நூல்களை
தெரிந்து பெற்றுக் கற்றிட்டு
தெளிந்த அறிவைப் பெற்றுமே
தேசம் போற்ற வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பால் வாழ்வில் உயர்வோம்

**செல்வி தயாதேவன் கம்சிகா** (A/L)
ஜெயபுரம் தெற்கு.

வாசிப்பதற்கு வயது தேவையில்லை. சிறியோரிலிருந்து பெரியோர்வரை அனைவரும் புத்தகங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றை வாசிக்க வேண்டும். வாசிப்பானது மகிழ்ச்சிகரமான ஒரு பொழுது போக்காகும். வாசிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம்.

வாசிப்பதன் மூலம் அறிவு வளர்கிறது. மனிதன் இதனால் மேன்மையடைகிறான். வாசிப்பதனால் மூளை வளர்ச்சியடைவதோடு பல கவலைகளிலிருந்து விடுபட்டு மனநிம்மதி கிடைப்பதற்கும் வாசிப்பு என்கிற பொழுதுபோக்கு துணைபுரிகிறது.

கல்வி கற்க வயது என்கிற எல்லை தேவையில்லை. ஏனெனில் எல்லோரும் எப்போதும் கல்வி கற்று முன்னேறமுடியும். கட்டாயம் பாடசாலை சென்று தான் படிக்க வேண்டும் என்றில்லை. அதேபோல் வாசிப்பானது நம் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்.

நூலகத்திற்கு சென்று அங்குள்ள நூல்களை நாம் வாசித்து பயன்பெற வேண்டும். வாசிப்பதன் மூலம் நாம் புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்கிறோம். இவ் உலகில் எந்த மூலையிலாவது புதிதாக புத்தகங்கள் வெளிவந்திருந்தால் அதை நாம் புத்தகசாலைச் சென்றடையச் செய்தல் வேண்டும்.

வாசித்துப் பெறுகின்ற அறிவிலிருந்து நாம் ஒருவருடன் பழகும் விதம், பேசும் சிதம் நடந்து கொள்ளும் விதம் என்பவற்றை தெரிந்து கொள்வதனூடாக சமூகத்தில் நற்பிரஜை யாகவும் வாழ வாசிப்பானது வழி செய்கிறது. வாசிப்பானது மனஆரோக்கியத்தை மேம்படுத்தும் நினைவாற்றலை அதிகரிக்கும். வாசிப்பதன் மூலம் ஒவ்வொரு நபரிடமும் எழுத்தாற்றல், படைப்பாற்றல், சிந்தனைத்திறன், நினைவாற்றல் போன்ற பல திறன்கள் வளர்ச்சி அடைகின்றது.



செய்தித்தாள்களை வாசிப்பதன் மூலம் நாட்டில் நடைபெறும் விடயங்கள் அதாவது நாட்டின் பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்ளமுடிகிறது. இதுவே செய்தித்தாளை வாசிக்காது நாட்டில் நடைபெறும் எந்தவொரு விடயங்கள் பற்றியும் தெரியாதவர் மத்தியில் செய்தித்தாள்களை வாசித்து நாட்டின் தற்போதைய நிலை பற்றி அறிந்தவராகிய எமக்கே இவ்வுலகம் சொந்தமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை புத்தகங்களை வாசிக்காதவர், பழைய கால நடைமுறைகள் பற்றி தெரியாதவர்கள் மத்தியில் பல கதைப் புத்தகங்களை வாசித்து, பழங்காலத்து நடைமுறைகள் பற்றி சில இலக்கியங்களினூடாகவும் அறிந்து கொண்டு நாம் இருக்கின்றபோது இவ்வுலகம் எமக்கு சொந்தமாகிறது.

வைத்திய முறைகள், மருத்துவ குணம் பற்றிய தகவல்கள் அடங்கிய நூல்களும் இன்றைய சமூகத்தில் உள்ளன. பாடசாலை செல்லாது மேல் படிப்பு படிக்காதவர்கூட இவ்வாறான நூல்களை வாசித்து தனது அறிவுத்திறனை மேம்படுத்துகின்றபோது, பாடசாலை சென்று மேல் படிப்பு எல்லாம் முடித்தவர் மத்தியில் இவ்வாறான சிறந்த நூல்களை வாசித்தவர்களே மேன்மையடைகின்றனர்.

எந்தவொரு நூல்களையும் வாசிக்காதவர் தன் அறிவு திறனை இழக்கின்றார். வாசிப்பு பழக்கமானது எங்கள் மூளையை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது. ஒரு கதையை நாம் வாசிக்கின்றபோது அக்கதையில் வருகின்ற கதாபத்திரங் களை நினைவில் கொள்கிறோம். இதன் மூலம் எமது நினைவாற்றல் அதிகரிக்கிறது. மறதி நோய்கள் ஏற்படாது இருக்க வாசிப்பு துணைபுரிகிறது. எமது உடலை ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க உடற் பயிற்சி செய்கிறோம். அதேபோல் எமது மூளையை ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க வாசிப்பு என்கிற மூளைப்பயிற்சி தேவைப்படுகிறது.

வாசிப்பதன் மூலம் ஒரு நாட்டின் நிலைவரும் உலக நடைமுறை, பழங்கால வாழ்க்கை முறை மற்றும் கற்பனை கதைகள் போன்றவற்றையெல்லாம் தெரிந்து கொள்பவருக்கு இவ்வுலகம் சொந்தமாகிறது.

வாசிப்பதன் மூலம் மனிதன் முற்றிலும் பூரணமடைகிறான் நோய்களற்று வாழ்கிறான். சிந்தனையாற்றல், நினைவாற்றல் எழுகிறது. வாசிப்பதிலிருந்து மனிதன் பெறும் பயன்கள் எண்ணற்றவையாகும். எனவே வாசிப்பவருக்கே இவ்வுலகம் சொந்தமாகிறது. ஒவ்வொரு மனிதனும் வாசிக்க வேண்டும். பல நூல்களை தேடித்தேடி வாசிக்கவேண்டும் உலகமானது வாசிப்பவருக்கே சொந்தமானது. நாம் அனைவரும் இவ்வுலகிற்கு சொந்தமானவராக இருக்கவேண்டும். எனவே வாசிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனையும் மாணவர் சமுதாயமும்

முத்துக்குமாரன் பிரியங்கா
A/L (2024)
கிளி/முழங்காவில் ம.வி.

போதைப் பொருள் பாவனை இன்று எமது நாட்டினைப் பெரிதும் சீரழிப்பதனை ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். கள்ளங்கபடம் அறியாது மாணவச் செல்வங்களையும் நயவஞ்கமாப் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாக்கி, உங்களது எதிர்காலத்தைச் சீரழிக்க சில சக்திகள் முனைந்து வருகின்றன.

இதன் படுபயங்காரப் பாதிப்பினை அறியாது. மாணவர்கள் மட்டும், இருப்பதாகச் செயலில் ஈடுபட்டு, தடுமாறி திக்குத்திசை தெரியாமல் தடுமாறுகிறார்கள். மாணவர்கள், இளைஞர்கள் அவர்கள் இந்நாட்டின் எதிர்காலச் செல்வங்கள், அவர்கள் போதைப்பொருள் பாவனையில் தீய நண்பர்களின் சகவாசத் தினால் அறியாதத்தனமாக ஈடுபட்டு பெரும் துன்பத்திற்கம், சீரழிவுக்கும் ஆளாகிவிடக் கூடாது.

மாணவர்களாகிய நாம் போதை மருந்துப் பொருட்களின் விபரங்கள் குறித்தும், அவற்றின் மோசமான பாதிப்புகள் குறித்தும் நீங்கள் கட்டாயமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த உயரிய நோக்கில், இங்கு போதைப் பொருட்கள் பற்றியும் அவை உங்களது உடலுக்கும், உள்ளத்திற்கும், சிந்திக்கும் திறனுக்கும் ஏற்படுத்தக்கூடிய சிறப்பாக வாழுங்கள்.

இளம்பிள்ளைகள் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் மேலும் அபிவிருத்தி காணும் உடலமைப்பைக் கொண்டவர்களாக இருக் கிறார்கள். மனதை மாற்றக்கூடிய வஸ்துக்கள் அல்லது மருந்துகளை உட்கொள்வதானது உங்களது வாழ்க்கை, உங்களது கற்றல் நடவடிக்கைகள், உங்களது தொழில் மற்றும் உங்களது எதிர்காலத்தினையே எதிர்மாறான வழியில் பாதித்துவிடக்கூடும். போதைப் பொருட்கள் பற்றியும் அவற்றின் பாதிப்புகள் பற்றியும் வேறெங்காவது சிகரமான நீங்கள் கற்றுள்ளீர்களா?

நாம் போதைப்பொருட்கள் சிலவற்றைப் பாவிப்பது மற்றும் கைவசம் வைத்திருப்பதற்கு சிறைத்தண்டனை மற்றும் மரண தண்டனை என்பது சட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளன. என்பதனை மறக்கவேண்டாம். நாம் பேதைப் பொருட்களை நீண்டகால பாவனையின் அபாயங் களாக ஊளவியல் ரீதியான அபாயங்கள் பல காணப்படுகின்றன. மனஅழுத்தம், சித்தபிரமை, பயம், உடல் ரீதியான துன்பங்கள், கல்லீரல் இயங்காதிருத்தல், இருதய நோய் மற்றும் இயக்க மின்மை, நுரையீரல் பாதிப்பு போன்ற பிரச்சினை வகைகள்நிண்டகாலபோதைப்பொருள்பாவனை யின் மூலம் ஏற்படும் அபாயங்களாகும்.

போதைப் பொருளின் குறுகிய கால பாவனையால் ஏற்படும் ஊளவியல் அபாயங் களாக சித்தப்பிரமை, தடுமாற்றம், ஞாபகமறதி, கவலை என்பனவும் உடல் ரீதியான அபாயங் களாக இரத்தக் கொதிப்பு அதிகரித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் இருதய இயக்கம், உடல் உஷ்ணம் அதிபரிப்பு, காயங்கள் என்பனவும் ஏற்படக் கூடும். நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் என்பதனைப் பொறுத்து போதைப் பொருட்கள், பல வித்தியாசமான பெயர்களினால் குறிப்பிடப் படலாம்.

இக்காலத்தில் மதுபானம் அருந்துப வராது பதின்ம வயதிலிருக்கும் இளம் வயது வந்தோருக்கும், சிலவேளைகளில் வயதா னோருக்கும் அபாயகரமானது. மதுபானம் என்பது ஒரு போதைப்பொருள், அத்துடன் அது மிகவும் பாவிக்கப்படும் போதை மருந்துமாகும். மதுபானம் குறித்து தவறான தகவலைப்பெறுவது பிள்ளைகளுக்கு இலகுவானது அவர்கள் தமது பெற்றோர் மதுபானத்தை அருந்துவதைப் பார்க்கக்கூடும். அல்லது மது அருந்துவது ஒரு நிறைந்த களிப்பூட்டும் விடயத்தைக் காட்டும் தொலைக்காட்சி விளம்பரக் காட்சிகளைக் கூறலாம். மக்கள் விளையாட்டுக்களை ஒன்றாக இருந்து பார்ப்பது அல்லது ஒரு பெரிய விருந்தில் குடிப்பது போன்றவற்றை நீங்கள் பார்க்கலாம். எனவே மாணவர்களாகிய நீங்கள் விழிப்புடன் இருங்கள்.

நம்நாட்டில் சிகரெட்டுகளும், புகையிலை நீண்டகால பாவனையில் காணப்படுகின்றன. ஆம்ஃபிடமின் (ஊக்கி வகை) குடும்பத்தின் ஒரு பகுதியில் மெத்தாம் ஓர் ஊக்கிப் பொருளாகும். அது கிளர்ச்சி நிலையை உணருதல், சித்தப்பிரமை, குழப்பம், தாக்குதல் உணர்வு போன்ற எதிர்மறை குறுகியகால தாக்கங்களையும் உருவாக்கக்கூடியது.

மேலும் அதிகரித்த இருதயத்துடிப்பு, உயர்இரத்த அழுத்தம் மற்றும் எதிர்பார்க்காத நடவடிக்கை என்பன மற்றும் குறுகியகால தாக்கங்களில் அடங்கும். நீண்டகால பாவனை யானது மூளைச் சிதைவை ஏற்படுத்தும் என்பதற்கு சான்று உள்ளது. ஏனைய நீண்டகால பாதிப்புக்கள் குருதிக் கலன்களில் சிதைவு, கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல் சிதைவு, ஆழமான பல்சிதைவு மற்றும் மனஅழுத்தம் என்பன அடங்கும் தொடர்ந்தும் மதுபாவனையை மேற்கொள்வது, இயற்கையான பசி உணர்வை குறைக்கச் செய்வதனால் ஆகக்கூடுதலான எடைக்குறைவுக்கும் போஷாக்கு இன்மைக்கும் இட்டுச் செல்லும்.

மேலும் எக்ஸ்ரரி (மெய்மறந்த இன்பம்) என்பது MDMA எனவும் அழைக்கப்படுகிறது. இந்த போதை மருந்து சக்தியூட்டுவதுடன் மாயத்தேற்ற நிலைகளையும் உருவாக்குகிறது. கஞ்சாவுக்கு அடுத்ததாக எக்ஸ்ரரி 16 -24 வயதுகளில் உள்ள இளம் வளந்தேரிடையே பாவிக்கப்பெறும் மிகவும் கூடுதலான பாவனை மருந்தில் இரண்டாவது இடத்தைப்பெறுகிறது. எக்ஸ்ரசியின் குறுகிய கால பாதிப்புகளின் ஆற்றல் மட்டத்தில் காணக்கூடியதான அதிகரிப்பு, காலத்தின் சிதைந்துபோன ஒரு காட்சி, பிரமைகள், தெளிவற்ற பார்வை, நரம்புகளை இழுத்தல் ஆகியன உள்ளடங்கும்.

இத்துடன் எக்ஸ்ரசி உடம்பின் உஷ்ணக்கட்டுபாட்டினைத் தாக்குவதாக அறியப்படுவதுடன் உடலில் உஷ்ணத்தை அதிகக்கச் செய்தல் மற்றும் நீர்வற்றிப் போகச் செய்தல் ஆகியவற்றுக்கான சந்தர்ப்பங் களையும் அதிகரிக்கச் செய்கிறது. எக்ஸ்ரசியை நீண்ட காலம் பாவிப்பவர்கள் குறித்த ஆய்வானது இதனைப் பாவிப்போர் ஞாப சக்தியை இழத்தல், மனஅழுத்தம் மற்றும் கவலை ஆகியவற்றினால் பாதிப்படைவர் எனக் கூறுவது எக்ஸ்ரசியானது ஈரல், சிறுநீரகம் மற்றும் இருதயக் கோளறுகளுடனும் சம்பந்தப் பட்டுள்ளது.

அமினி, கசகசாவில் இருந்து ஹெரோயின் தயாரிக்கப்படுகிறது புகைப்பது, மூக்கினால் ஒள்ளிழுப்பது அல்லது ஊசி மூலம் ஏற்றிக் கொள்ளக்கூடிய உயர்போதை தரும் இம்மருந்து ஆச்சரியமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது. ஹெரோயின் வேகம் மற்றும் தீவிர பாதிப்புகள் அதன் தீங்குதரும் குணத் திற்கும் அடிமையாக்குதலுக்கும் பங்களிப் பினைத் தருவதாகவுள்ளது. ஹெரோயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகியகால பாதிப்புகளில் குறைந்த வலி உணர்வு, குறைந்த உடல் உஷ்ணம், அரிப்பெடுக்கும் உடல்நோய் போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மேலும் ஹெரோயின் பாவனையில் நீண்டகாலப் பதிவில் பழுதடைந்த பற்கள் மற்றும் ஈறுகள், குறைவடைந்தநோய் எதிர்ப்புச் சக்தி. போஷாக்கின்மைக்கு இட்டுச் செல்லும், பசியின்மை மற்றும் தூக்கப்பிரச்சினை ஆகியன அடங்குவதாக இருக்கும். இப்பானையின் உச்சக்கட்டத்தில் இருதய நோய்ப் பிரச்சினைகள், கோமா மற்றும் மரணத்துக்கு இட்டுச் செல்லக்கூடியதாகும்.

சிகரெட் மற்றும் பீடி புகைத்தலின் அபாயம் குறித்து பாடசாலையில் ஒருபோதும் விவாதிக் கப்படவில்லை. உங்களுடைய நான் என்னும் அகங்காரத்தையும், ஆண்மையையும் சவாலுக்கு உட்படுத்துவதன் மூலம் நண்பர்கள் வழமையாக உங்களிடம் இத்தீய பழக்கத்தினை அறிமுகப்படுத்துகிறார்கள். புகைத்தலுடன் உங்களது ஆராய்ச்சியைத் தொடங்குமுன், சிகரெட்டின் உட்பொருட்கள் உங்களது உடலையும், ஆரோக்கியத்தையும் எவ்விதம் பாதிக்கின்றது என்பதனை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகத்தின் முக்கியத்துவமும் உடல் ஆரோக்கியமும்

DR.(Mrs) S.V.கிளமென்ரீனா
இலவச சித்த மருத்தகம்,
பல்லவராயன் கட்டு, பூநகரி.

நாம் உட்கொள்ளும் உணவானது சமிபாடு அடைந்த பின்னர் ஊட்டச்சத்து வேறாகவும் கழிவுப்பொருட்கள் பிரிக்கப்படுகின்றன. இந்த கழிவுப்பொருட்களை அகற்றுவதில் முக்கிய பங்காற்றுவது சிறுநீரகம் ஆகும். இது வயிற்றுக் குழியில் அவரை வித்து வடிவிலான இரு சிறுநீரகங்கள் காணப்படுகின்றன. வெளியேறும் சிறுநீரின் அளவு வெவ்வேறு சூழ்நிலைகளில் வேறுபடுமாயின் சாதாரண வளர்ந்த மனிதனில் அமைதியான நிலையில் நீர் வெளியேற்றமாக நாளொன்றுக்கு சராசரியாக 1500 மி.லீ சிறுநீர் வெளியேற்றப்படுகிறது. இவ் அளவானது முறையற்ற உணவுப் பழக்கத்தாலும் மாறிவரும் வாழ்வியலாலும் கழிவுகள் வெளியேறும் பாதையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் வெளியேறும் சிறுநீரில் மாற்றம் ஏற்படுகிறது. சிறுநீரகங்களின் செயற்பாடுகளை அத்தனை சுலபமாக கருதிவிட முடியாது. உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு சிறுநீரகங்களுக்கு உண்டு.

அதாவது இரத்தத்திலஉள்ள நச்சுக்களை வெளியேற்றவும், இரத்த அமுக்கத்தை கட்டுப்படுத்தவும் ஹிமோகுளோபினை உற்பத்தி செய்யவும், உணவில் உள்ள ஊட்டசத்துகளை உறிஞ்சவும் உதவுகிறது. சிறுநீரகங்கள் மூன்று முக்கிய ஹார்மோன்களை சுரக்கின்றன. அவை எரித்ரொபொயிட்டீன், ரெனின் மற்றும் கல்சிட்ரியால் ஆகும். இவை மூன்றும் உடல் ஆரோக்கியத்தை பராமரிப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றது. எனவே தான் சிறுநீரக பாதிப்பு ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தையும பாதிக்கின்றது.



1) சிறுநீரகத்தில் ஏற்படும் பாதிப்புக்கள்

சிறுநீர் பாதை தொற்றுநோய்கள் (Urinary tract Infection) மிகவும் பொதுவான தொற்று நோய்களாகும் இவை குழந்தைகள் முதல் வயதான அனைவரையும் பாதிக்க செய்யும் பெருப்பாலும் பெண்களுக்கு அதிகம் காணப் படுகிறது. சுமார் 5 இல் ஒரு பெண் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது பாதிக்கப் படலாம் என ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தோல் அல்லது மலக்குடலில் இருந்து வரும் பக்டீரியாக்கள் சிறுநீர்குழாய்குள் நுழைந்து சிறுநீர் பாதையில் உள்ள உறுப்புக்களை பாதிக்கும். உடலில் ஏற்படும் தொற்றுநோய்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இடம் வகிப்பது இத் தொற்றாக குறிப்பாக பைலோனெப்ரிடிஸ் (Phylonephrits) என்னும் நோய் UTI காரணமாக ஏற்படும் சிறுநீரக தொற்று ஆகும்.

**அறிகுறி**

- சிறுநீர் வருவது போன்ற உணர்வு இருக்கும் ஆனால் சிறுநீர் சிறிதே வெளியேறும்



- சிறுநீர் துவாரம் எரியும்
- அடிவயிற்றில் தசைப்பிடிப்பு
- சிறுநீர் இரத்தம் கலந்து வெளியேறல்
- சிலர் வெகுவாய் சோர்வாக இருப்பர்
- சிறுநீர் நிறம் மாறி இருக்கலாம்
- சிறுநீர் பாதையில் இந்த நோய்தொற்று ஏற்பட்டால் அதிக காய்ச்சல், வாந்தி வருவது போன்ற உணர்வு குமட்டல், அதிக குளிர் மற்றும் நடுக்கம் ஏற்படும்.

  இது போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்க அதிகளவு தண்ணீர் அருந்துவதன் மூலம் இந்நோயிலிருந்து குணமடைய முடியும். தினசரி 6 முதல் 8 கிளாஸ் ( 2.5ℓ - 3.5ℓ) நீர் அருந்த வேண்டும்.
- சிறுநீரை அடக்குதல் ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே சிறுநீர் கழிப்பதை அடக்கக்கூடாது. அவசர அவசரமாக சிறுநீர் கழிக்கக் கூடாது. இதன் மூலம் சிறுநீர் முழுவதுமாக வெளியேறுவது தடுக்கப்படலாம்.
- பிறப்பு உறுப்பு பகுதியில் ஸ்பிரே அல்லது பவுடர் போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது. சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பிறப்பு உறுப்பு பகுதியை பராமரிக்க வேண்டும்.
- பொது கழிப்பறைகளை பாவிப்பது தவிர்த்தல் வேண்டும்.

**தீர்வாக**

1. இளநீர், எலுமிச்சம்சாறு, கரும்புச்சாறு அடிக்கடி அருந்துதல்.
2. பராம்பரியமாக பயன்படுத்தம் குதிரைவாலி அரிசி வகைகளை பயன்படுத்துதல்.

2) சிறுநீர்க் கற்கள் தோன்றுதல்

சிறுநீர்க் கற்கள் கொடூரமான வலியை ஏற்படுத்த வல்லது சிறுநீரகம் அல்லது சிறுநீர் பாதையில் அளவுக்கு அதிகமான யூரிக் அமிலம், கல்சியம் போன்ற தாது உப்புக்கள் தேங்குவதால் உருவாகும் கற்களும் சிறுநீர கற்கள் என்று பெயர் அடுத்து தண்ணீர் குறைவாக குடிப்பதாலும் சிறுநீரககற்கள் உருவாகின்றன.

**சிறுநீர்க் கற்களின் வகைகள்**

பெரும்பாலும் கற்கள் கல்சியம் வகையைச் சேர்ந்தவை கற்கள் எந்த தாது உப்பைக் கொண்டவையோ அதன் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தலாம்.

- யூரிக்அமிலக் கற்கள்
- சல்பேட் கற்கள்
- மும்மைக்கற்கள்
- சிஸ்டீன் கற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீர் கற்கள் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை**

1. கிணற்று நிரை கொதிக்கவைத்து வடிகட்டி பாவித்தல்
2. இலை வகைகள், முருங்கக்காய், தக்காளிப்பழம் போன்ற வற்ற குறைவாக பாவித்தல் அல்லது தவிர்த்தல்
3. அதிக அளவிலான புரத உணவுகளை தவிர்த்தல்
4. கல்சியம் கூடுதலாக உள்ள பால், யோகட் போன்ற வற்றை குறைவாக பாவித்தல்.
5. கூடுதலாக விற்றமின் C, விற்றமின் D உட்கொள்வதை தவிர்த்தல். விற்றமின் D கூடுதலான கல்சியம் அகத்துறிஞ்சல்களுக்கு உதவுதல்.
6. உணவில் முள்ளங்கி, நீத்துகாய், வாழைபொத்தி போன்றவற்ற கூடுதலாக பயன்படுத்துதல்
7. வாழை நடுத்தண்டு சாறு பயன்படுத்துதல்
8. மா விலங்கப்பட்டை, சாறாணை, நன்னாரி, பயன்படுத்துதல். (மருத்துவரின் ஆலோசனைப்படி)
9. மூக்கறட்டை கீரை பயன்படுத்துதல்

3) சிறுநீரக செயலிைப்பு (Kidney Railure)

சிறுநீரகத்தின் முக்கிய செயற்பாடு இரத்தத்தை வடிக்டுவதும் மற்றும் உடலில் உள்ள நச்சுக்களை அகற்றுவதும் ஆகும். இதன் செயற்பாடுகள் குறைவது அல்லது முழுவதும் தடைப்படுவது தான் சிறுநீரக செயலிழப்பாகும் இதற்கு சிகிச்சையளிக்க ட்பாலிசிஸ் அல்லது சிறுநீரக மற்றும் அறுவை சிகிச்சை செய்யப்படுதல்.

1. ஆட்டோ இம்யூன் நோய்கள் (Auto immune Discases)
2. சில மரபணு நோய்கள்
3. நெப்ரோடிக் நோய்க்குறி (Nephrotic syndrome)
4. சிறுநீர் பாதை பிரச்சினைகள்

போன்ற பிரச்சினைகள் தான் சிறுநீரக செயலிழப்புக்கு வழிவகுக்கிறது.

சிறுநீரகங்கள் மோசமாக சேதமடையும் வரை அதற்குரிய அறிகுறிகள் தோன்றவே தோன்றாது. கடைசி கட்டத்தில் தான் சிறுநீரக செயலிழப்பு தெரிய வரும். சிறுநீரக செயலிழப்பை நெருங்குவதற்கான அறிகுறியில் முதன்மையானது அதிகபடியான திரவம் மற்றும் அதிக படியான உடற்கழிவுகள் வெளியேறுவது இது போன்ற அறிகுறிகளை நீங்கள் கவனித்தால் கவனத்தில் கொள்வது அவசியம் அதுமட்டுமன்றி

- அரிப்புக்கள் ஏற்படுவது
- தசைப்பிடிப்பு
- குமட்டல்
- வாந்தி
- பசியின்மை
- கால் மற்றும் கணுக்காலில் வீக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறல் அல்லது குறைவாக வெளியேறல்
- மூச்சுப் பிரச்சினை
- தூக்கத்தில் சிரமம்
- வயிற்றுவலி முதுகுவலி
- வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் மூக்கின் வழியே இரத்தப்போக்கு ஏற்படுவது செயலிழப்புக்கான அறிகுறிகளாக இருக்கும்.

ரத்தத்தில் அதிகபடியாக இருக்கும் கல்சியம் ஆக்துலேட், யூரிக்கமிலம் போன்ற வற்றை பிரித்து சிறுநீரன் வழியாக வெளியேற்றுவது தான் சிறுநீரகத்தின் மிக முக்கியமான பணி, சிறுநீரக லேசாக பழுதடைந்தால் இந்த கழிவுகளை சரியாக வெளியேறாமல் இருக்கும் போது சிறுநீரக கற்கள் தோன்றும்.

சிறுநீரகசெயலிழப்பு என்பது ஒரே நாளில் தீடிரென வரும் பிரச்சனை அல்ல நாள் பட்ட சிறுநீரக நோய்கள் அதிகமாகி ஒரு கட்டத்தில் சிறுநீரகம் செயல் பட முடியாமல் போவதுடன் சிறுநீரக செயலிழப்பு ஏற்படும். இந்த சிறுநீரக செயலிழப்பு ஆபத்து பின்வரும் நோய் உள்ளவர்களுக்கு ஆபத்தாகிறது.

1. நீரிழிவு நோய்கள் உள்ளவர்கள்
2. உயர் இரத்த அழுக்கம் உள்ளவர்கள்
3. இதய நோய் உள்ளவர்கள்
4. பரம்பரையில் யாருக்கும் சிறுநீரக பிரச்சினை இருந்தால்
5. சிறுநீரக தோற்றத்தில் வேறுபாடு
6. வயதானவர்களுக்கு
7. நீண்ட காலமாக வலி நிவாரணிகளும் ஸ்டிராய்டுகளும் அதிகமாக எடுத்துக் கொள்பவர் களுக்கும்.

சிறுநீரக செயலிழப்பு திவிரமடையும் போது இது இதயம் வரை தாக்கி பக்க வாதம், மாரடைப்பு கூட ஏற்படுத்தும் சிறுநீரக பாதிப்பு ஆனது ஒட்டு மொத்த உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் எனவே சிறுநீரகத்தை பாதுகாக்க உலக சிறுநீரக தினமும் உலக சுகாதார சிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவம் இதழ் இன்று பல இதழ்கள் விரிகிறது

சின்னையா செம்முகிலன்
வலைப்பாடு

வாசிப்பு வாரமதில் வாசகர்கள்
உங்களுக்கு ஆண்டில் ஒரு விழா
அழைக்கின்றோம் வாரீர்.



வரி எழுத தான் கம்பன் அல்ல
கவி எழுதும் கவிஞன் அல்ல
கதை எழும் ஆசான் அல்ல
புதுமை என்னும் புது மனிதன்
புகுந்து கொண்ட வெறும் நாணல் தான்
ஆலமரத்தின் கீழ் முளைத்த நாணல்
சிறு சொல்லெடுத்து வரி தொடுத்து
எழுதுகின்றேன் உங்களுக்காய்
பல்லவம் இதழ்-5 பல இதழ்கள்
விரிகின்றது நறுமணமும் தருகின்றது.

பல்லவம் எனும் சொல் பல பொருள் படினும்
பல்லவராயன் எனும் பார் ஆண்ட அரசன்
நாமம் பல்லவம் நூல் என்று படைத்தோம் உங்களுக்காய்

போர் படை வளர்த்தான் பல தொழில் படைத்தான்
அஞ்சாத நெஞ்சும் அசையாத வீரமும் அவர்
பெயர் சொல்லும்
பல்லவராயன் கட்டு அதை பிரித்து
பார்த்தல் பொருள்படும்
எல்லாளன், சங்கிலியன், குளக்கோட்டன்
பண்டார வன்னியன் என பல அரசர்
வாழ்ந்திட்ட பல்லவராயன் பார் வாழ்ந்த
பூமி இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்கள் தான் அமைத்து நூல்கள்
பல வைத்தோம்
ஆரம்ப காலம் முதல் ஆகமங்கள் வரை
அத்தனையும் இங்குள்ளன
அள்ளிப் பருகிட அனைவரும் இங்கு வாரீர்
அள்ள அள்ள குறையாத
அரிய கல்வி நூல்கள் இங்குண்டு
புலமை கல்விக்குப் புலவர் கவி வரை
ஆலயங்கள் ஆகமங்கள் அத்தனையும் இங்குண்டு
உண்ண உருவீர் என்றெல்லோ
பந்திக்கு இலையெடுத்தோம்
ஆக்கி வைத்த உணவெல்லாம்
அலுமாரிகளில் கிடக்கின்றது.
அள்ளி உண்ண வருவீர்கள் அத்தனையும் உங்களுக்காய்
வீட்டுக்கோர் நூலகங்கள்
விரைவாக அமைத்திடுவீர்
கற்றோரும், நற்றோரும்
கழி கூர்ந்து வாழ வேண்டும்
ஏழைக்கு கல்வி கற்க
எனினும் உதவுங்கள்



பள்ளிக்கு காலம் உண்டு
நூலக கல்விக்கு காலம் இல்லை
அங்கத்துவம் பெற்று
அள்ளி சென்று படியுங்கள்
மற்றோரும் பயன்பெற அதை
மடிக்காதீர், கிழிக்காதீர்,
கிறாதீர், கிடைக்காது பொக்கிசங்கள்
உள்ளூராட்சி மன்றமதில்
உங்களுக்காய் நிதி ஒதுக்கி
கல்வி கற்கும் புத்தகங்கள்
கனத்தவை இருக்கின்றது
வாரீர் உம் அறிவுப் பசி போக்க
பல்லவராயன் தனில் படித்து
பல் கலை பெற்றிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வாசிப்பதன் நேசித்தலின் மகத்துவம்

**செல்வி யோ. பிரதிகா**
கிளி/ ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது மாணவர்களாகிய நாம் சிறுவயதிலே வாசிக்க ஆரம்பிக்கின்றோம். மாணவர்கள் தமது கல்வி நிலையை பூரணமடையச் செய்வதற்கு வாசிப்பே முக்கியத்துவம் ஆகின்றது. வாசிப்பதற்கு விஞ்ஞான வளர்ச்சியோ அறிவியல் வளர்ச்சியோ தொழில்நுட்ப வளர்ச்சியோ காரணமாக அமைவதில்லை. மாணவர்கள் அறிவியல் வளர்ச்சியை பயன்படுத்தியே வாசிப்பது அடிப்படையாகும். எனினும் அது பிரதான காரணமாக அமையாது அறிவில் குறைந்தவர்கள் வாசிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்திருப்பார்கள்.

வாசிப்பு என்றால் புத்தகங்களை மாத்திரம் வாசிப்பதில்லை. நாம் கதைக்கும் ஒரு சொற்கள்கூட வாசிப்பு ஆகின்றது. மாணவர்கள் முன்னேற்றத்தின் அடிப்படைக்கு வாசிப்பின் மகத்துவமே பிரதான காரணியாக அமைகின்றது. மாணவர்கள் பரீட்சைகளை எதிர்நோக்கு கின்றார்கள். அப் பரீட்சையை எவ்வாறு எழுதுகின்றார்கள்? எவ்வாறு என்ற புத்தகங்களினை படிப்பது மட்டுமன்றி வாசிப்பினைப் பூரணமடையா செய்வதன் மூலம்தான் அவர்கள் புத்தகங்களை வாசிக்கின்றார். அவ்வாறு பார்த்தால் வாசிப்பின் மூலம் தான் பரீட்சையை எதிர்நோக்கி சித்தியடைகின்றார்.

நாம் அறிவினை பலவிதமாகப் பிரித்துப் பார்க்கின்றோம். எவ்வாறு எனில் மூன்று அறிவுள்ளவர்கள் ஐந்து அறிவுள்ளவர்கள் ஆறு அறிவுள்ளவர்கள் என்று பல விதத்தில் பிரித்துப் பார்க்கின்றோம். அந்தவகையில் நாம் "ஐந்து அறிவுள்ளவர்களை விலங்குகள் என்றும் ஆறு அறிவுள்ளவர்களை மனிதர்கள்" என்றும் கூறுகின்றோம். அப்படிப் பார்க்கும்பொழுது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாசிப்பின் மகத்துவத்தை அறிந்து இருத்தல் மகத்துவமாகும்.

ஒரு மனிதன் அவனது தாய் வயிற்றில் கருவாக உருவாகும்போதே தாய் வாசிப்பு பற்றி சொல்லிக் கொடுக்கின்றாள். அவன் கருவில் இருந்து வெளியே வரும்போது ஏதோ ஒரு அறிவுடைய மனிதனாகப் பிறக்கின்றான். குழந்தைகள் அழும் சத்தத்தைக்கூட ஒரு வாசிப்பாக எடுத்துக் கொள்ளலாம் அல்லவா இவ்வாறு நாம் பார்க்கப்போனால் உலகத்தில் உள்ள அனைவரும் வாசிப்பின் மகத்துவத்தை அறிந்துதானே இருப்பார்கள். அறிந்திருப்பது மட்டுமன்றி அவர்களுக்கு வாசிப்பின் மகத்துவம் தெரிந்திருக்கின்றது.

நாம் மாணவர் என்ற நிலையை அடையும் முன்னர் முதன்முதலில் எமது தாயின் கருவிலேயே வாசிப்பு பற்றி சிறிதளவு அறிந்திருக்கின்றோம். அதன் பின்னர்தான் நாம் முழுமையாக மாணவர் என்ற நிலையில் வாசிப்பை பூரணமடையச் செய்கின்றோம். வாசிப்பதன் மூலம் மாணவர்கள் பல விதமான பயனை அடைகின்றனர். அவ்வாறாக பயன்கள் பற்றி அடுத்த பந்தியில் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் வாசிப்பதன் மூலம் எவ்வாறான பயன்களை அடைகின்றார்கள் எனின், எழுதும்போது பலவிதமான எழுத்துப்பிழைகளை இனங்கண்டு அவற்றை சரியாக எழுது கின்றார்கள். மற்றும் பலவிதமான பரீட்சைக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றனர். மற்றும் நிகழ்வுகளின்போது நிகழ்வுகளை (பாடல், கவிதை போன்றன) துணிந்து செய்கின்றனர் இவ்வாறானவற்றிற்கும் மூல காரணமாக அமைவது வாசிப்பின் முக்கியத்துவமே மூல காரணமாக அமைகின்றது.

மாணவர்கள் வாசிப்பதன் மகத்துவத்தை அறிந்திருப்பதனால் எவ்வளவு பயனை அடைகின்றார். வாசிப்பதற்கு மாணவர்களுக்கு இளமைப் பருவமே உகந்ததாகும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" எனும் பழமொழிக்கு இணங்க மாணவர்கள் இளமையில் கற்றால்தான் பெரியவர்களானாலும் அவர்களது கல்வி அவர்களை விட்டு எப்பவும் பிரியாது. ஆகவே மாணவர்கள் ஒவ்வொருவரும் இளமையிலேயே வாசிக்க ஆரம்பித்தால்தான் அவர்களது வாசிப்பு அவர்களுக்கு பூரணம் அடையச் செய்யும்.

வாசிக்கத் தெரியாத மாணவர்கள் கூட வாசிப்பை பூரணம் அடையச் செய்யமுடியும். "விடாமுயற்சி பலன் தரும்" எனும் பழமொழிக்கு இணங்க வாசிக்கத் தெரியாவிட்டால் பல தடவைகள் முயற்சித்தால் அதில் எங்களிற்கு ஒரு பலனை அளிக்கின்றது. விடாமுயற்சியினால் வாசிக்கத் தெரியாத மாணவர்கள் கூட வாசிப்பார்கள்.

மாணவர்களாகிய எமக்கு வாசிப்பின் மகத்துவம் எவ்வளவு முக்கியமாகின்றது. வாசிப்பின் மகத்துவத்தை நாம் அறிந்திருக்காவிடின் அது எங்களிற்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்து கின்றது. எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் எனின் எமது பெயரைக்கூட எழுதத் தெரியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகையால் மாணவர்கள் ஒவ்வொருவரும் வாசிப்பின் மகத்துவத்தை நேசித்தல் அவசியமாகும். மாணவர்கள் வாசிப்பினை நேசித்தால் தான் அவர்கள் வாசிப்பினைப் பூரணமடையச் செய்யமுடியும்.


மாணவர்கள் ஒவ்வொருவரும் வாசிப்பினை நேசித்தல் வேண்டும். ஏனெனில் வாசிப்புத்தான் மனிதனை பூரணமடையச் செய்கின்றது. வாசிப்பதனால்தான் நாம் பல பயன்களைப் பெறுகின்றோம். வாசிக்கத் தெரியாவிடின் எவ்வளவு அழகு. நிறமும் இருந்தாலும் அவர்களுக்கு சமூகத்தில் மதிப்பே கிடையாது. நாம் எமது சமூகத்தில் நல்ல மாணவராகவும் நல்லதொரு நாட்டுப் பிரஜையாகவும் வாழவேண்டும் எனில் வாசிப்பு தெரிந்திருத்தல் அவசியமாகும்.

நாம் ஒரு இடத்திற்கு சென்று எமது பெயரை கையொப்பம் இடத்தெரியாவிடில் அது எவ்வளவு பெரிய பாதிப்பாகும். ஆகவே மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நல்ல புத்தகங்களை வாசித்து வாசிப்பில் பூரணமான மனிதனாகவும் நல்லதொரு பிரஜையாகவும் திகழ வாசிப்பு பெரும் முக்கியத்துவம் ஆகும். ஆகவே மாணவர்கள் ஆன நாம் வாசிப்பினை நேசித்து அதன் மகத்துவத்தை அறிந்திருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org